VISIT…

வரலாறு சந்தித்த வழக்குகள்

வைகோ

வரலாறு சந்தித்த வழக்குகள்

வைகோ

வெளியீடு

ம.தி.மு.க. மாநில வழக்கறிஞர் அணி

(மதுரை கிளை)

2/869, திருமோகூர் சாலை,

யானைமலை ஒத்தக்கடை, மதுரை – 625107

செல் : 94437 94751

நூலின் தலைப்பு : **வரலாறு சந்தித்த வழக்குகள்**

முதல் பதிப்பு : மார்ச் 2008

பதிப்பு ஆசிரியர், கணினி வடிவமைப்பு : ப. அருணகிரிநாதன்

நூலின் அளவு : டெம்மி சைஸ் 8½ x 5½

தாள் : 80 G.S.M. மேப் லித்தோ

முகப்பு அட்டை வடிவமைப்பு : விஜயன்,
கிரியேட்டிவ் ஸ்டுடியோ,
☎ 98402 75550

அச்சிட்டோர் : சிவசக்தி அச்சகம், சிவகாசி
☎ 04562-27 4005; 27 5005
Cell: 94433-79005

நன்கொடை : ரூ 10 /-

வழக்கறிஞரின் வல்லமை!

நீதியை நிலைநாட்டுகிற இடத்தில் இருப்பவனுக்கு முன்னால், எல்லாக் குடிமக்களும் சமமானவர்களே! இன்றைய உலகத்தில் நீதியின் அடிப்படைக் கோட்பாடு, 'சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம்' என்கிற கருத்தை, 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே வகுத்தவன் தமிழன்!

மான உணர்வு உடையவர்கள், மரணம் நிச்சயம் என்றாலும், நீதிமன்றத்திற்கு முன்பு மண்டியிட மாட்டார்கள்.

வழக்கறிஞரை வைத்துத்தான் வழக்கு. எவ்வளவு அருமையாக ஒரு வழக்கைச் ஜோடித்து இருந்தாலும்கூட, அதிலும் ஏதாவது ஒரு ஓட்டை இருக்கத்தான் செய்யும். அதைப் பார்த்து அடித்து உடைத்து, வழக்கைத் தகர்ப்பதுதான் வழக்கறிஞரின் வல்லமை!

– வைகோ

வெற்றி உறுதி

அறிவார்ந்த பேச்சால் - எழுத்தால், பொன் ஏடுகளில் பதிக்கக்கூடிய கருத்துகளைச் சொல்லித்தான், மக்கள் மன்றத்தில் திராவிட இயக்கம் வளர்ந்தது. தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது, அகில உலகத்திலும் சிந்தனை, பேச்சு, எழுத்து ஆற்றல்களைப் தகுதிகளைப் பெற்ற தலைவர்கள்தான் வரலாற்று மாற்றங்களை உருவாக்கினார்கள். அத்தகைய ஆற்றலாளர்கள் வரிசையில் உயரிய இடத்தைப் பெற்று இருப்பவர் வைகோ!

தன்னுடைய ஆணித்தரமான வாதங்களால், நாடாளுமன்ற விவாதங்களில், எந்தப் பிரச்சினையிலும் அவையின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பக் கூடியவராக, அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் நன்மதிப்பைப் பெற்றவராகத் திகழ்ந்தார். அதனால்தான், 'நாடாளுமன்றத்துக்கு வைகோ போட்டியிடவில்லை' என்ற அறிவிப்பு வந்தபோது, 'ஒரு திறமையான நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்துகளை, பணியை இந்தியா இழக்கின்றது; குறிப்பாக தமிழகம் இழக்கின்றது' என்று மாற்றுக் கட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இயல், இசை, நாடகம் என எந்தத் துறையானாலும், அங்கே தன்னுடைய முத்திரையைப் பதிக்கக் கூடியவர் வைகோ வைகோ என்றால் அது மிகையாகாது. அரசியல் கட்சிகளின் எல்லைகளைக் கடந்து, இலக்கியக் கூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகள், நடுநிலையாளர்களால், வரவேற்றுப் பாராட்டப்படுகிறது. ஆன்மீக இலக்கியத்தையும், தன்னுடைய பார்வையில் படைத்த விதம் ஆன்மீகவாதிகளையும் கவர்ந்து உள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் யார் வேண்டுமானாலும் கட்சியைத் துவக்கலாம்; தலைவர் என்று பறைசாற்றிக் கொள்ளலாம்; நாளைய முதல்வர் என்று அறிவித்துக் கொள்ளலாம் என்று உள்ள நிலையில், உன்னதமான பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரராக, தலைவர் என்ற சொல்லுக்கு முற்றிலும் தகுதியானவராக, களத்தில் நின்றால் அனைவரும் வியந்து பார்க்கின்ற வகையில் விண்ணளாவ விசுவரூபம் எடுக்கின்ற அளவுக்கு உயரிய நிலையிலே, உழைப்பால் - தகுதியால் - ஆற்றலால் மரியாதைக்கு உரிய இடத்தில் இருப்பவர் வைகோ என்பதை எவராலும் மறுக்க முடியாது.

நாளைய சமுதாயத்தின் நம்பிக்கைக்கு உரிய தலைவராக வைகோ அவர்களைக் காண முடிகிறது. ஏற்றுக்கொண்ட கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ளாததால், பொது வாழ்வில் அவர் அடைய வேண்டிய உயரத்தை இன்னும் எட்டவில்லை. 'வானம் தொட்டுவிடும் தூரம்தான்' என்ற நம்பிக்கையோடு, வேங்கைகளாக - வரிப்புலிகளாக வைகோ தலைமையில் அணி வகுக்கின்ற உண்மையான தொண்டர்களின் பலம்தான், எத்தகைய

சோதனைகளிலும் தளராத மன உறுதியை, அவருக்கு அளித்து இருக்கிறது. மீடுநடை போடுகின்ற வைகோவின் படை, வெற்றிச் சிகரத்தை அடைந்தே தீரும். இது உறுதி, உறுதி, உறுதி!

தலைவர் வைகோ அவர்கள் மீது மதிப்புக்கொண்ட வழக்கறிஞர்கள் நடுநிலையான வழக்கறிஞர்கள், ஆதரவு நல்கி வருகின்றனர். வைகோவின் தலைமை ஏற்றுச் செயலாற்றி வருகின்ற மறுமலர்ச்சி வழக்கறிஞர் பட்டாளம், கழகம் வழக்குகளைச் சந்தித்த சோதனையான காலங்களில், கண் துஞ்சாது கடமை ஆற்றியது. ஒத்துழைப்பு நல்கிய வழக்கறிஞர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முக ஆற்றல்களை ஒருங்கே படைத்த தலைவர் வைகோ அவர்கள், **'வரலாறு சந்தித்த வழக்குகள்'** என்ற தலைப்பில், 24.09.2007 அன்று தஞ்சை வழக்கறிஞர் மன்றத்தில் உரை ஆற்றினார். அந்த உரையின் ஒவ்வொரு செய்தியும், சமுதாயத்தின் பல்வேறு கூறுகளைத் திறனாய்வு செய்கிறது.

ஒரு வழக்கறிஞரான வைகோ அவர்களின் வாதங்கள், இளம் வழக்கறிஞர்களுக்கு வழிகாட்டக் கூடியவை. தமிழகத்தின் வழக்கறிஞர்கள் அனைவரும் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் நிரம்பிய அந்த உரையை, தம்பி அருணகிரி அவர்கள், புத்தகமாகப் பதிவு செய்து உள்ளார். இயக்க வரலாறை, முறையாகப் பதிவு செய்து வருகின்ற அருணகிரியின் பணிகளுக்கு நமது பாராட்டுகள். 28.3.2008 அன்று, திருச்சியில் நடைபெறுகின்ற, மறுமலர்ச்சி தி.மு.கழக மாநில வழக்கறிஞர்கள் அணி கலந்து உரையாடல் கருத்தரங்க நிகழ்விலே, இந்த நூலை வெளியிட்டு இருப்பது பொருத்தமானது.



தேவதாஸ்,
ம.தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர்

நன்றி!

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், தலைவர் வைகோ, கொள்கை விளக்க அணிச்செயலாளர் நாஞ்சில் சம்பத் உள்ளிட்ட கழக முன்னணியினர், சொற்பொழிவாளர்கள் மீதும், தமிழ்நாடு முழுவதும் பல முனைகளில், நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டு இருக்கின்ற வழக்குகளை எதிர்கொண்டு, அவற்றின் முனைமுறித்திட முனைப்புடன் முன்னின்று பணி ஆற்றுவது "மறுமலர்ச்சி வழக்கறிஞர் படை.'

ஒரு வழக்கறிஞரான வைகோ அவர்கள், மக்கள் மன்றத்தில்எடுத்து வைக்கின்ற வாதங்களை நாடு அறியும். 'எங்கள் மன்றத்துக்கும் வைகோ வந்து உரையாற்ற வேண்டும்' என்று தஞ்சை வழக்கறிஞர்கள் மன்றம் அழைப்பு விடுத்தது. அந்த அழைப்பை ஏற்று, 24.9.2007 அன்று, **'வரலாறு சந்தித்த வழக்குகள்'** என்ற தலைப்பில், தலைவர் வைகோ அவர்கள் உரை ஆற்றினார். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் அமைந்த அவரது வாதங்களை, கட்சி சாராத வழக்கறிஞர்கள் அனைவரும் பாராட்டினர்.

மதுரை வழக்கறிஞர் சுப்பாராஜ், "தஞ்சையில் வைகோ ஆற்றிய உரையை நான் நேரில் கேட்வில்லை; ஆனால், தஞ்சாவூர் வழக்கறிஞர்கள் பலர் என்னிடம் பாராட்டிச் சொன்னார்கள். அந்த உரையை நூலாகத் தொகுத்துத் தாருங்கள், கழக வழக்கறிஞர் அணியின் சார்பில் நாங்கள் நூலாக வெளியிடுகிறோம்' என்று என்னிடம் தொலைபேசியில் கேட்டுக் கொண்டார். 28.3.2008 அன்று, திருச்சியில் நடைபெறுகின்ற, மறுமலர்ச்சி தி.மு.கழக மாநில வழக்கறிஞர்கள் அணி கலந்து உரையாடல் கருத்தரங்க நிகழ்விலே, இந்த நூல் வெளியிடப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குகளைத் தொடுத்து, வாதங்களை அடுக்கி, வெற்றிச் சாதனை படைத்து வருகின்ற வழக்கறிஞர்கள், வைகோவின் மறுமலர்ச்சிப் படையில், முனைப்புடன் முன்னின்று பணி ஆற்றுகின்ற செயல்மறவர்கள், மாநில இளைஞர் அணிச் செயலாளர் க.அழகுசுந்தரம், மதுரை மாநகர் மாவட்டப் பொருளாளர் எஸ். ஆசைத்தம்பி,மதுரை மாநகர் மாவட்டத் துணைச் செயலாளர் எம்.மனோகரன், மாநில சட்டத்துறைத் துணைச் செயலாளர் புதூர் இரா.சந்திரன்,

திருப்பரங்குன்றம் (கிழக்கு) ஒன்றியச் செயலாளர் அ.கதிரேசன், மதுரை மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச்செயலாளர் கோ.ரவி ஆகியோர், இந்த நூலை அச்சிட உதவினர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை வழக்கறிஞர் மன்றத்தில் வைகோ உரை ஆற்றிட ஏற்பாடு செய்த, தஞ்சை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் துரை.பாலகிருஷ்ணன், மாநில இளைஞர் அணித் துணைச்செயலாளர் உதயகுமார், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் பூமிநாதன் ஆகியோருக்கு நன்றி.

என் எண்ணங்களை வண்ணங்கள் ஆக்கி, கண்ணைக் கவரும் முகப்பு அட்டையை வடிவமைத்த கிரியேட்டிவ் ஸ்டுடியோ விஜயன், ஐசக், சிறப்பாக அச்சிட்டுக் கொடுத்த குமரேசன் (சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி), அலுவலகப் பணிகளில் உதவிய ருத்ரன், மோகன்தாஸ், கணினி வடிவமைப்பில் உதவிய சங்கரன்கோவில் பாடாலிங்கம், மதுரை நா. அமுதன், மேல்மாந்தை செல்வராஜ், முகப்படக் கலைஞர் ராஜா ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகோவின் புகழ்பெற்ற உரைகள் நூல்களாகவும், ஒளிப்படக் குறுவட்டுகளாகவும் வெளியிடப்பட்டு உள்ளன. தாயகத்தில் கிடைக்கும். நூல்களைப் படியுங்கள், உரைகளைக் கேளுங்கள், பாருங்கள்; நண்பர்களைப் பார்க்கச் செய்யுங்கள்.

தமிழை நேராக அச்சிடுங்கள், ***சாய்த்து அச்சிடாதீர்கள்***
தமிழ்ச் சொற்களைத் தனித்தனியாக முழுமையாக எழுதுங்கள்!
ஒருமுறையேனும் உலகத்தைச் சுற்றி வாருங்கள்.
உங்கள் வாழ்க்கையை ஒரு நூலாக எழுதுங்கள்.

அருணகிரி
(9444 39 39 03)

வரலாறு சந்தித்த வழக்குகள்

13 ஆண்டுகளுக்கு முன்னர், 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி அன்று எந்தத் தஞ்சை வழக்கறிஞர் சங்கத்தில் நான் எந்த அரங்கத்துக்கு உள்ளே உரையாற்றினேனோ, அதே வளாகத்துக்கு உள்ளே, இன்று மஞ்சுசூழ்வானம் மழைத்துளி விழுகிற நேரம் பெரும் திரளான வழக்கறிஞர்கள் கூட்டம். **"வரலாறு சந்தித்த வழக்குகள்"** என்ற தலைப்பில் பேசுவதற்காக, செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள், தஞ்சை வழக்கறிஞர்கள் மன்ற வளாகத்தில் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்து இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள், இந்த நிகழ்ச்சியில் நான் உரை ஆற்றுவதற்கு வாய்ப்பு அளிப்பதற்கான தீர்மானத்தை, ஒரு மனதாக நிறைவேற்றித் தந்தார்கள் என்ற தித்திக்கும் செய்தியை என் அன்புச் சகோதரர் உதயகுமார் அவர்களும், துரை. பாலகிருஷ்ணனும் என்னிடம் கூறியபோது, நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

இப்படி ஒரு நல்ல வாய்ப்பை வழங்கிய அனைத்து வழக்கறிஞர்களுக்கு, இந்த வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்த மாட்டான் வைகோ, அரசியல் பேசி எவரையும் காயப்படுத்த மாட்டான் என்ற நம்பிக்கையோடு, எனக்கு இந்த மேடையைத் தந்து இருக்கிற தஞ்சை வழக்கறிஞர்கள் சங்கப் பொறுப்பாளர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிப்பது தலையாய கடமை ஆகும்.

வழக்குகளை வரலாறு எப்படிச் சந்தித்ததோ, இங்கே மழை வந்தால் அதை எப்படிச் சந்திப்பது என்ற கவலையோடு சங்கப் பொறுப்பாளர்களும், ஏன் நானும்கூட அதே கவலையோடுதான் இருந்தேன். ஏனெனில், இந்த

நிகழ்ச்சியில் பேச வேண்டும் என்ற பேரவாவுடன் வந்து இருக்கிறேன். என் சிற்றறிவுக்கு எட்டிய பல செய்திகளை, கருத்துகளை, இந்த மன்றத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு வந்து இருக்கிறேன். 'நீதிமன்றத்தில் ஒலிக்க வேண்டிய குரல், நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டிய குரல், மக்கள் மன்றத்தில் ஒலிக்கிறது' என்று என் இனிய நண்பர்கள் இங்கே வாழ்த்து உரைத்தார்கள்.

'நீதிமன்றம் சந்திக்க வேண்டிய சக்தி வாய்ந்த இன்னொரு நீதிமன்றம் இருக்கிறது' நான் சொல்லவில்லை; அரசியல் தாத்பரிய விஞ்ஞானி, மாமேதை, மனிதகுல வரலாற்றின் போக்கைத் திருப்பிய **'மூலதனம்'** நூலைத் தந்த காரல் மார்க்ஸ் சொன்னார்:

"The Jury itself has to face another Jury of public opinion."

நீதிமன்றம் சந்திக்க வேண்டிய சக்தி வாய்ந்த இன்னொரு நீதிமன்றம்- அதுதான் மக்கள் கருத்து என்கின்ற மாபெரும் நீதிமன்றம்.

இன்று செப்டம்பர் 24 ஆம் தேதி. இது எவ்வளவு பொருத்தமாக அமைந்து இருக்கிறது தெரியுமா?

'மேயர் கோர்ட்'

281 ஆண்டுகளுக்கு முன்னர், 1726 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள், யூனியன் ஜாக் கொடி உலகின் பல பகுதிகளில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டு இருந்த காலத்தில், பிரித்தானியப் பேரரசர் முதலாம் ஜார்ஜ், கிழக்கு இந்தியக் கம்பெனிக்காரர்கள், சென்னையிலும், கொல்கத்தாவிலும், பம்பாய் மாநகரிலும் முனிசிபல் மாநகராட்சிகளை அமைத்துக் கொள்ளவும், நீதிமன்றங்கள் அமைத்துக் கொள்ளவும், மேயர் கோர்ட் என்கிற நீதிமன்றங்கள் அமைத்துக் கொள்ளவும் அனுமதிக் கொடுத்தபின்பு, செப்டம்பர் 24 ஆம் தேதிதான் **'மேயர் கோர்ட்'** என்கிற முதலாவது நீதிமன்றம், கொல்கத்தாவில் அமைக்கப்பட்ட அந்தத் திருநாளை நினைவூட்டுகிற விதத்தில், வரலாறு சந்தித்த வரலாறுகளை நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

தஞ்சைதான் மிகவும் பொருத்தமான இடம். வானத்தில் மேகக்கூட்டம் திரண்டு இருக்கிறது. மழை வரக்கூடும். மழை வந்துபோன அறிகுறியும் இருக்கிறது. ஒருகாலத்தில் வளம் நிறைந்த நன்னாடு இது. அதனால்தான் இந்தச் சோழ மண்டலத்துக்கே உரிய பெருமையை, அநபாய குலோத்துங்கனின் இதயத்தைக் கவர்ந்த அருள்மொழித்தேவன் என்கிற சேக்கிழார்,

கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலி சோழர் காவிரி நாட்டு
இயல்புதனை யான் நவிலல் உற்றனன்

இந்தச் சோழ நாட்டின் இயல்பை, புலிக்கொடி பறந்ததே இமயத்தின் உச்சியில், அதை நாட்டிய சோழர் நாட்டின் பெருமையைச் சொல்ல வந்தேன் என்கிறார். இந்தச் சோழ நாட்டை, '**நீர் நாடு**' என்று சொன்னார்.

'**மாமழை போற்றுதும்**' என்று இளங்கோ வர்ணித்தாலும், நீர்நாடு என்று அழைக்கப்பட்ட நாடு,

காடெல்லாம் கழைக்கரும்பு
காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை
வயல்எல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னங்
குளம் எல்லாம் கடலென்ன
நாடெல்லாம் நீர்நாடு
தனையொவ்வா நிலம் எல்லாம்

இப்படி நீர்நாடு என்று சொல்லத்தக்கப் பெருமை எங்கும் இல்லையே என்று புகழப்பட்ட இந்த நாட்டின் சிறப்பிலேதான், நீதி எங்கே நிலைநாட்டப்பட்டது என்பதற்கு முகவுரையாக, நமது ஜீவகுமார் அவர்கள் வழக்குரை காதையை இங்கே நினைவூட்டினார்.

இளங்கோவின் காப்பியத்தில் வழக்குரை காதை வருகிறது. மன்னவனுக்கு எதிரிலே சென்று, காவிரிப்பூம்பட்டினத்துக் கண்ணகி, **தேரா மன்னா** "அட அறிவு கெட்டுப்போன அரசனே" என்று கேட்கிறாள்.

வரைமுறை வகுத்த தமிழன்

அதிர்ச்சி அடைந்த மன்னன், 'நீ எங்கிருந்து வருகிறாய்?' எனக் கேட்க, 'நீதியைக்காத்த மனுநீதிச்சோழன் மண்டலத்தில் இருந்து வருகிறேன்' என்று கண்ணகி குறிப்பிட்டாள். நீதியை நிலைநாட்டுகிற இடத்தில் இருப்பவனுக்கு முன்னால் எல்லாக் குடிமக்களும் சமமானவர்களே. இன்றைய உலகத்தில் நீதியின் அடிப்படைக் கோட்பாடு, சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம் என்கிற கருத்தை, 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே தந்தவன் தமிழன்.

அது ஒரு அரண்மனை. அதன் வாசலில் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டு இருந்தது. ஒருநாள் அந்த மணியின் ஓசை ஒலித்தது. 'எங்கோ அவலம் நேர்ந்து விட்டது என்று அலறித்துடித்து ஓடி வருகிறான் மன்னன். பசுவின் துயரத்தை

அறிந்தான். அதன் கன்றைக் கொன்றவன் தன் மகன் என்று அறிந்து, அந்தப் பழியைத் துடைக்கத் தன் ஒரே மகன் வீதிவிடங்கன் மீது தேரைச் செலுத்த வேண்டும் என்றான். அமைச்சர் சொல்கிறார், "காரம்பசுவின் கண்ணீருக்குக் காரணமானவன் இளவரசன் என்பதனால், தவறு நேர்ந்து விட்டது என்றாலும், கன்றுதான் ஓடி வந்து சக்கரத்திற்கு உள்ளே இடைபுகுந்து இறந்து விட்டது என்று அமைச்சர்கள் சொன்னாலும் சமாதானம் அடையவில்லை மன்னன். ஒரேயொரு பிள்ளைதான் அரசருக்கு, தவம் இருந்து பெற்ற பிள்ளை.

ஒரு மைந்தன் தன் குலத்திற்கு உள்ளான் என்பதும் உணரான்
தர்மம் தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன்
மருமந்தன் தேராடி உற உறர்ந்தான் மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ உமக்கு எளிதோ என்றான்

ஒரே மகன்தான். இருப்பினும் தர்மம் தன் வழியில் செல்வது கடமை என்று நீதி வழங்கினான். அருமந்த மகனின் அந்தப் பெருமைக்கு உரிய சோழ மண்டலத்தின் தஞ்சையில், நீதிமன்றங்களைப் பற்றிப் பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்து இருக்கிறது. இங்கே வந்து இருக்கிற வைகோ ஒரு நான்கைந்து ஆண்டுக் காலம் வழக்கறிஞராகப் பணியாற்றதை இங்கே குறிப்பிட்டார்கள். மூத்த வழக்கறிஞர்கள், அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்கள், தஞ்சை நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றத்திலும் வாதிடுகிற வல்லமை வாய்ந்த வழக்கறிஞர்கள் நிறைந்து இருக்கிற இந்தச் சபையில் நான் பேசுகிறேன்.

தமிழனின் தரம்

இவனால் இயலுமா என்றால், உள்ளத்தில் உரமும் உண்மையும் இருக்குமானால், எந்த இடத்திலும் எவனும் எதுவும் செய்ய முடியும் என்பதை நான் சொல்லவில்லை, அதையும் தஞ்சைதான் சொல்கிறது. ஒரு வழக்கு வந்தது. அந்த வழக்கில், நீதி கேட்டு இருவர் வந்தார்கள். அவர்களுள் ஒருவன் பெயர் மாணிக்கம், இன்னொருவன் பெயர் முத்து. இந்த ஆண்டு ஆறாம் வகுப்புப் பாடத்தில் கதையாகச் சொல்லப்பட்டு இருக்கிறது இந்தச் செய்தி.

மன்னனோ திருமாவளவனாம் கரிகாற்பெருவளத்தான். வயதில் இளையவன். இவனால் நீதியைத் தர முடியுமா? நம் வழக்கோ ரொம்பச் சிக்கலான வழக்கு. இவனோ இளையவன் என்று ஒரு கலக்கம்.

வழக்கு என்ன?

மாணிக்கத்தின் நிலத்தை முத்து விலைக்கு வாங்கி விட்டான். சிறிது காலம் கழித்து, முத்து ஏர் கொண்டு உழுதபோது, பெரும் பொருட்செல்வத்துடன் ஒரு

கருவூலம் அவன் கைக்குக் கிடைக்கிறது. விலைமதிப்பு அற்ற ஒரு புதையல். உடனே இந்த முத்து, அதை எடுத்துக்கொண்டு, ஓடிச்சென்று, 'இது உன்னிடம் நான் வாங்கிய நிலத்திலே கிடைத்தது, உனக்கே உரியது" என்கிறான்.

அதற்கு மாணிக்கமோ, "நான் நிலத்தை என்றைக்கு உனக்கு விற்று விட்டேனோ, அந்த நிலத்துக்கும் எனக்கும் எந்த சொந்தமும் இல்லை இது உனக்கு உரியது. எனக்குத் தேவையில்லை" என்கிறான் மாணிக்கம்.

நான் நிலத்தைத்தான் வாங்கினேனே தவிர, நிலத்துக்கு உள்ளே இருந்த சொத்தையும் நான் வாங்கவில்லை. இது எனக்கு உரியது அல்ல, உனக்கே உரியது என்கிறான் முத்து. இது அந்தக் காலம்.

பக்கத்து வீட்டிலே வளர்கிற மாமரத்தின் கிளை தன் வீட்டு எல்லைக்கு உள்ளே அத்துமீறி நுழைந்து எட்டிப்பார்க்கிற நேரத்தில், பழுத்துக் குலுங்குகிற கனியாக இருந்தாலும் அது என் வீட்டு நிழலுக்கு உள்ளே கனி காய்த்து இருக்கிற காரணத்தால், அந்தக் கனியும் எனக்குத்தான் என்று வழக்குத் தொடுப்பதற்கு வழக்கு மன்றத்தை நாடுவது இந்தக் காலம்.

ஒரு பிள்ளைக்கு இரண்டு தாயா?

ஒரு குழந்தை யாருக்குச் சொந்தம் என்று தீர்ப்பு அளிக்கிற வேளையில், அது தீர்ப்பு அளிக்கிறவன் ஞானத்தைப் பொறுத்தது என்பதற்கு, விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் நீங்கள் பழகிக் கேட்டு இருக்கக் கூடிய சாலமன் கதை நினைவுக்கு வரலாம்.

ஒரு பிள்ளையை இரண்டு பெண்கள் உரிமை கொண்டாடி வருகிறார்கள். இந்தக் குழந்தை எனக்கே சொந்தம், நான் பெற்ற குழந்தை என்று அவர்கள் இருவரின் குரல் எழுந்து கேவுகிற நேரத்தில், "குழந்தையை இரு கூறாக வெட்டி, இருவரும் பாதியாக எடுத்துச் செல்லலாம்" என்று சாலமன் கூறியதாகவும், பத்துத் திங்கள் வயிற்றில் சுமந்த அந்த அருமைத் தாய், "இல்லை இல்லை அவளிடத்திலேயே இருக்கட்டும்" என்று ஒருவள் கூறியபோது, "இவளே இந்தக் குழந்தையின் தாய்" என்று சாலமன் தீர்ப்புச் சொன்னதாகவும் விவிலியத்தில் சொல்லப்படுகிறது.

குலவிச்சை கல்லாமல் பாகம் படும்

இங்கே கரிகாற் பெருவளத்தானிடம் அதற்கு மாறான ஒரு வழக்கு வருகிறது. நிலத்தில் கிடைத்த புதையலை இருவருமே வேண்டாம் என்கிறார்கள். புதையல் முத்துவுக்குச் சொந்தமா? மாணிக்கத்திற்குச் சொந்தமா? என்கிறபோது, இவன் இளைஞனாக இருக்கிறானே? இவன் எப்படி இந்த

வழக்கில் தீர்ப்பு அளிக்கப் போகிறான் என்று அவர்கள் கவலையோடு இருந்த நேரத்தில், இவன் முதியவனாக வேடம் தரித்துக் கொண்டு வயது முதிர்ந்தவனாக வந்து நீதி உரைத்தான் என்றும்

உரை முடிவு காணான் சோழன் என்ற
நரை முதுமக்கள் உவப்ப
நரைமுடித்துச் சொல்லால்
முறை செய்தான் சோழன்
குலவிச்சை கல்லாமல் பாகம் படும்

என்ற பழமொழிக்கு ஏற்ப அவன் தீர்ப்பு அளித்தான் என்றும் ஒரு பாடல்.

என்ன தீர்ப்பு?

"முத்துவுக்கு ஒரு அருமை மகன். மாணிக்கத்துக்கு ஒரு அருமை மகள் இருவரும் திருமணம் முடித்துக் கொள்ளட்டும். இந்தப்புதையல் இருவருக்கும் சேரட்டும்" என்று அவன் தீர்ப்பு அளித்தான்.

எல்லா இலக்கியங்களிலும் கரிகாற் பெருவளத்தான் நரை முடித்து தீர்ப்புச் சொன்னான் என்று இருக்கிறதே தவிர, அது என்ன வழக்கு என்று நான் தேடித் தேடிப் பார்த்தேன். எதிலும் கிடைக்கவில்லை. இது பட்டினப்பாலையிலும் இல்லை பழைய இலக்கியத்திலும் இல்லை, பழமொழியிலும் இல்லை.

இந்த ஆண்டு ஆறாம் வகுப்புப் பாடப்புத்தகத்தில், இதை கதையாகச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்பதற்குப் பொருத்தமாக இருக்கிறது என்பதனால் இப்படி அதில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று மாத்திரம் உங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

3000 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டதே, அந்தத் தொல்காப்பியத்தில், பொருள் அதிகாரத்தின் 647 சூத்திரத்தில்,

வழக்கு எனப்படுவ உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்கு ஆகலான

எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

உயர்ந்தோர் எடுத்துச் சொல்வது வழக்கு.

இன்றைக்கு வழக்கு மன்றத்தில் எப்படிப்பட்ட வழக்குகள் வருகின்றன என்பதை காணுகிற நேரத்தில், நீதிமன்றங்கள் பல நம் கண் முன்னால் வந்து நிற்கின்றன.

திருத்தி எழுதிய தீர்ப்பு

குற்றவாளி எனத் தண்டிக்கப்பட்ட பல பேரை, பல ஆண்டுகளுக்குப் பின்னால் அவர்கள் குற்றம் இழைக்கவில்லை என்று மக்கள் மன்றம் தீர்ப்பு அளித்து இருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் கிறிஸ்து பிறப்பதற்கு 469 ஆண்டுகளுக்கு முன்னால் ஏதென்ஸ் நகரத்தில் பிறந்தவன் சாக்ரடீஸ். அவன் வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டு, அவன் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன . "இவன் கடவுளை மறுக்கிறான் - கடவுள் நம்பிக்கையை அழிக்கிறான், ஏதோதோ பேசி இளைஞர்களைக் கெடுக்கிறான்" என்ற குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. அப்போது ஜனநாயக உணர்வுகள் தழைத்து இருந்த நேரம், சிந்தனைகள் வளர்ந்து இருந்த காலம்.

அந்த மன்றத்தில் தீர்ப்பு அளிக்கிற ஜூரிகளின் எண்ணிக்கை 501. தன் தரப்பு வழக்கை சாக்ரடீஸ் எடுத்து வைக்கிறார். "அறிஞர் பெருமக்கள், ஞானிகள், அரசியல் மாமனிதர்கள் நிறைந்து இருக்கக்கூடிய ஏதென்ஸில், இந்த வயதான கிழவன் இளைஞர்களைக் கெடுக்கிறேன் என்பதை எப்படி ஏற்றுக் கொள்கிறீர்கள்?" என்று கேட்கிறார்.

தீர்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வழக்கு மன்றத்தில் மொத்தம் உள்ள 501 பேர்களுள், 281 பேர் சாக்ரடீஸ் குற்றவாளி என்று தீர்ப்பு அளித்தார்கள். 220 பேர் குற்றவாளி அல்ல, நிரபராதி என்று தீர்ப்பு அளித்தார்கள். பெரும்பான்மை தீர்ப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதற்குப்பின்னர் அங்கே இருக்கிற ஒரு தீவிலே **"டெல்சி திருவிழா"** நடக்கிறது. டெல்சித் தேவைதைக்குத் திருவிழாக் காலம். ஏதென்ஸ் நாட்டு மக்கள், பொருட்களோடு கப்பலில் அந்த தீவுக்குச் செல்கிறார்கள். அதனால், சாக்ரடீசுக்கு மரணதண்டனை ஒத்தி வைக்கப்படுகிறது. குறிப்பிட்ட தேதியில் மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை. தீவுக்குச் சென்று வழிபாடு முடிந்து வந்ததற்குப் பிறகு மரண தண்டனையை நிறைவேற்றலாம் என்ற நிலையில் சிரிட்டியாஸ் என்ற நண்பன் சொல்கிறான்.

"தப்பித்துச் செல்வதற்கு வழி இருக்கிறது சாக்ரடீஸ். எனவே, நீ தப்பிச்சென்று விடு. ஏதென்ஸ் நகரத்தில் இருந்து வெளியே சென்று மரணத்தின் பிடியில் இருந்து தப்பித்துப் போய்விடலாம்" என்று சொல்கிறபோது, சாக்ரடீஸ் சொல்கிறான். "நான் கிரேக்கத்தின் ஏதென்ஸின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவன். நீதிமன்றத்தின் தீர்ப்பு மரண தண்டனை. அதை நான் ஏற்கிறேன்" என்கிறார்.

ஆனால் நண்பன் அவன் கருத்தை ஏற்கவில்லை. மீண்டும் வலியுறுத்துகிறான். அப்போது, சாக்ரடீஸ் கூறுகிறார்: "நான்

சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவன். வார்த்தைக்கும் வாழுகிற வாழ்க்கைக்கும் வேறுபாடாக, வஞ்சகமாக வாழ்ந்தான் சாக்ரடீஸ் என்று வருங்காலம் என்னைச் சபிக்கக்கூடாது. எனவே, நான் மரண தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொன்னார். கி.மு. 399 ஆண்டில், **"கெமலாக்"** என்ற கொடியவிஷம் அவனுக்குத் தரப்பட்டது. பருகி மடிந்தார் சாக்ரடீஸ்.

ஆனால், மக்கள் மன்றத்திற்கு முன்னால் அந்தத் தீர்ப்பு மாற்றப்பட்டு விட்டது. 281 பேர் கொடுத்தத் தீர்ப்பு ஏற்கத்தக்கது அல்ல என்ற முடிவுக்கு வருகிறது மக்கள் மன்றம். உலகம் பாராட்டுகிறது. சாக்ரடீஸ் நாடகத்தையே அற்புதமாக எழுதுகிறான் வால்டேர். ஃபிரெஞ்சு நாட்டு மக்களுக்கு உணர்ச்சி ஊட்டுவதற்கு நிகழ்ச்சிகளைக் கோர்வையாகக் கொண்டுவந்து எழுதுகிறான்.

மக்கள் மன்றம் ஏற்காத தீர்ப்பு

இன்னொரு வழக்குமன்றம்!

இது கொல்கதாவுக்கு முன்னால், பிலாத்து மன்னனின் சபையில், ரோமானிய சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக இருக்கக்கூடிய ஆளுநருக்கு முன்னால் குற்றம்சாட்டப்பட்டவர் ஒரு இளைஞர். அதுவரை நம்பிக்கையாகச் சொல்லப்பட்டு வந்த கருத்துகளுக்கு மாற்றான கருத்துகளை, மலைகளின் சரிவுகளில் பேசி வந்தார் ஒரு வாலிபர். அவர் பெயர் இயேசு கிறிஸ்து.

அவர் கூண்டில் நிறுத்தப்படுகிறார். அவர்மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன. அவர் தரப்பில் வேறு எவரும் வாதிடவில்லை. இரண்டொரு வார்த்தைகள் அவரே பேசுகிறார். பதிவு ஆகின்றன. எச்சரிக்கைச் செய்கிறார். தீர்ப்பு வழங்கப்போகிற ஆளுநர் போன்டியஸ் பிலாத்துவின் மனைவி, "அந்த நல்ல மனிதருக்குத் தீங்கு விளைவிக்காதே" என்று எச்சரிக்கிறாள். அஞ்சுகிறான் பிலாத்து.

அந்த நீதிமன்றத்தின் வழக்கப்படி யாராவது ஒருவருக்கு மன்னிப்புக் கொடுக்கலாம், தண்டனையில் இருந்து விடுவிக்கலாம் என்ற மரபுப்படி, அங்கே வேதபாலகர்களுக்கு முன்னால் திரண்டு நிற்கின்ற மக்களிடத்தில் கேட்கிறான்.

"இந்த மன்றத்தில் இன்றைக்கு யாருக்கு விடுதலை கொடுக்கலாம்?" என்கிற போது, அங்கே இருந்தவர்கள், உரத்த குரலில், "கலகக்காரன் கொள்ளைக்காரன் பரபாசுக்கு விடுதலை கொடுங்கள்" என்று கூச்சல் எழுப்புகிறார்கள். ஆக, விடுதலை பரபாசுக்கு, மரணதண்டனை இயேசு கிறிஸ்துவுக்கு. சிலுவையில் அறையப்பட்டு மரண தண்டனை. இது ரோமபுரியின் வழக்கமான மரண தண்டனை. ஸ்பார்டாகஸ் உட்பட,

ஆயிரக்கணக்கானவர்கள் சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

இது தொடர்பான பழைய ஆவணங்களைத் தேடி எடுத்துத்தான் மெல் கிப்சன், "Passion of the Christ' என்ற அருமையான திரைப்படத்தை வெளியிட்டார். இயேசுவின் வாழ்க்கையைச் சித்தரித்து, ஒரு அற்புதமான ஆங்கிலத் திரைப்படத்தை உருவாக்கினார். அந்தப் படத்தை எதிர்த்துக் கருத்துகள் வெளிவந்தன. நான் அதைப்பற்றி விசாரித்தேன். ஆனால், கத்தோலிக்க மதகுருவாக இருக்கின்ற போப் ஆண்டவர், "இந்தத் திரைப்படம் சரியானது தான்" என்று வாடிகனில் இருந்து சான்றிதழ் கொடுத்தார். அந்தத் திரைக்காவியத்தில் சித்தரிக்கப்பட்டு இருக்கின்ற காட்சிகள், பைபிளில் எழுதப்படாதது. ஆவணங்களில் இருந்து சேகரிக்கப்பட்டது.

நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கொடுமையாகச் சித்திரவதை செய்யப்படுகிறார் இயேசுகிறிஸ்து. மிருகத்தனமாகத் தாக்குகிறார்கள். அந்த மெலிந்த தேகத்தில் அவர் சிலுவையைச் சுமந்து கொண்டு வருகிறார் - கொல்கதாவில் சிலுவையில் அறையப்படுகிறார். சிரசிலும் கால்களிலும் கைகளிலும் ஆணிகள் அறையப்பட்டது. பெய்கிற மழையோடு சிலுவையில் இருந்து வழிந்து ஓடுகிற நீரோடு இரத்தமும் கலந்து ஓடிய அந்த நேரத்திலும்கூட, தன்னைத் துன்புறுத்துபவருக்காக இரக்கப்பட்டார்.

இன்றைக்கு உலகில் கோடானகோடி மக்கள் தங்களுக்கு ஏற்படுகிற துன்பதுயரங்களின்போது, "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள்" என்ற அவரது மலைச் சொற்பொழிவை நினைவாகச் சொல்கிறார்களே, அதுவும் ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்புதான்.

மார்க்ஸ் சொன்னதைப்போல, அந்தத் தீர்ப்பை உலகம் ஏற்கவில்லை. மக்கள் மன்றம் ஏற்கவில்லை.

வீர மங்கை ஜோன்

1431 ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்தில் ஒரு தீர்ப்பு.

கூண்டில் நிறுத்தப்பட்ட பெண்ணுக்கு வயது 20. அவள், பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து வாள் ஏந்திப் போர் புரிந்து, பல கோட்டைகளைக் கைப்பற்றினாள். அவள்தான் வீரம்மிக்க ஜோன் ஆஃப் ஆர்க். அவள் மீது குற்றம் சாட்டப்பட்டது. நீதிமன்றத்தில் பல கேள்விகளுக்குச் சாமர்த்தியமாக பதில்சொல்லிக் கொண்டேவருகிறாள்.

கடைசியில், "நான் செய்தது குற்றம்" என்று மன்னிப்புக் கேள் என்றார்கள்.

என் அங்கங்களைப் பிளந்து எறிந்தாலும் நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன்" என்றாள்.

மரண தண்டனை விதிக்கப்பட்டது. "உயிரோடு கொளுத்துங்கள்" என்று தீர்ப்புச் சொன்னார்கள். விறகுக்கட்டைகளை அடுக்கி, அதில் ஜோன் ஆஃப் ஆர்க்கைப் போட்டு உயிரோடு கொளுத்தச்சொன்னார்கள். 1431 ஜனவரி 20 ஆம் நாள், அவளுடைய தலையில் ஒரு குல்லாவை அணிவித்தார்கள். **"Fool's Cap" "முட்டாள் தொப்பி"** என்று அதில் எழுதி வைத்தார்கள். அந்தத் தொப்பியில் பிரெஞ்ச் மொழியில் 3 சொற்களை எழுதிவைத்தார்கள். அவள் தலையில் வைத்த அந்தத் தொப்பியில், "சிலையை வணங்குகிறவள் வேதப்புரட்டுக்காரி, சமயத்தை மதத்தை எதிர்ப்பவள்" என்று எழுதி வைத்தார்கள். அவளைச் சித்திரவதை செய்தார்கள்.

மண்ணின் விடுதலைக்குப் போராடிய, பிரெஞ்சு நாட்டின் இளவரசரே நாட்டின் அரசனாக வர வேண்டும் என்று பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்துப் போராடிய ஜோன் ஆஃப் ஆர்க் உயிரோடு கொளுத்தப்பட்டாள்.

ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அதற்கு விஞ்ஞானப்பூர்வமான காரணங்கள் எனக்குத் தெரியாது. அவள் உடம்பில் உள்ள பகுதிகள் எல்லாம் எலும்பும் சாம்பலுமாக எரிந்து கிடந்தபோது, அவள் இருதயம் மட்டும் எரியாமல் கிடந்தது, நெருப்பில் கருகவில்லை. பிறகு அந்த இருதயத்தை எடுத்துக் கொண்டுபோய் ஓடுகிற நதியில் வீசினார்கள்.

இதில்தான் விசித்திரம் இருக்கிறது. சரியாக 24 ஆண்டுகள் கழித்து, அதே பாரீஸ் நகரத்தின் நாட்டர்டேம் சர்ச்சில் மீண்டும் ஒரு நீதிமன்றம் கூடியது.

ஏற்கனவே வழங்கிய தீர்ப்பு மேல் முறையீடாக, கொல்லப்பட்ட ஜோன் ஆஃப் ஆர்க்கிற்காக வாதாட, அந்த வழக்கு மன்றத்திற்கு அவளின் தாயும் சகோதரனும் வந்து இருந்தார்கள். வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். "ஜோனுக்கு விதிக்கப்பட்டத் தண்டனை கொடூரமானது; இந்த மண்ணில் பிறந்த உத்தமபுத்திரி அவள்; வணக்கத்துக்கு உரியவள்"என்று தீர்ப்புச் சொன்னார்கள்.

எந்த இடத்தில் ஜோன் தீ இட்டுக் கொளுத்தப்பட்டாளோ அந்த இடத்திற்கு, 24 ஆண்டுகள் கழித்து நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் பிரெஞ்சு நாட்டு மக்களும் சென்று, "ஜோன் ஆஃப் ஆர்க் வாழ்க" என்று முழக்கம் எழுப்பி மரியாதை செய்தார்கள்.

ஆக, வரலாறு சந்தித்த வழக்குகளில், ஒரு தீர்ப்பு சில ஆண்டுகள் கழித்து திருத்தப்படுகிறது.

வெள்ளைக்காரனின் ஆட்சிக் காலத்தில் வழக்கறிஞர்கள் எப்படிப்பட்ட முறையில் வழக்கு நடத்தினார்கள் என்பது சுவையான செய்தி. இந்திய நாட்டின் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த மாட்சிமை தங்கிய சபர்வால் வழங்கிய தீர்ப்பு குறித்து, அவர் நடவடிக்கை குறித்து மிட் டே **(Mid Day)** ஆங்கில ஏடு செய்த விமர்சனத்திற்காக, அந்த நாளிதழின் ஆசிரியர் வெளியீட்டாளர் கருத்துப் படம் வெளியிட்டவர்களுக்குத் தண்டனை வழங்கியது தில்லியில் இருக்கிற உயர்நீதிமன்றம்.

நான் அந்த வழக்குக்கு உள்ளே செல்ல விரும்பவில்லை.

ஆனால், இந்தியாவின் உயர்நீதிமன்ற நீதிபதி சபர்வால் மீது அவதூறு வழக்குக்கு இப்படி ஒரு வழக்கு தண்டனை. அப்படியானால் யார் மீதும் அவதூறு வழக்குப் போடலாமா? போடப்பட்டு இருக்கிறது. ஒரு வழக்கறிஞர் மீது போடப்பட்டது. இது வழக்கறிஞர்கள் மன்றம் அல்லவா? வழக்கறிஞர்கள் உங்கள் கட்சிக்காரருக்காக வாதாடுவதற்காக, கடமையைச் செய்வதற்காக வெற்றிபெறுவதற்காக அபாண்டமாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உடைத்து எறிவதற்காக வழக்கறிஞர்கள் வாதாடுகிற நேரத்தில், எடுத்தாளுகிற சொற்களுக்காக எங்கள் மீது வழக்குப் போடலாமா?

இந்தக் கேள்வி இன்று நேற்றல்ல, 18 ஆம் நூற்றாண்டில் எழுந்தது.

மதுரையில் எழுந்தது. போடிநாயக்கனூரில் ஜமீன்தார் இருந்தார்கள். திருமலை காமராஜப்ப பாண்டிய நாயக்கர் அவருடைய பெயர். அவருக்கு அந்த ஜில்லா கலெக்டர் க்ரோல் நெருங்கிய நண்பர், வெள்ளைக்காரர். இந்த இருவரும் நெருங்கிய நண்பர்களாக இருப்பது, கவர்னர் மாளிகையில் அதிகாரம் பெற்றவனாக இருந்த சல்லிவன் என்கிற வெள்ளைக்காரத் துரைக்குப் பிடிக்கவில்லை. அப்பொழுது கவர்னர் மாளிகையின் முதல் பிரதிநிதி. கவர்னருக்கு இருப்பதில் பாதி அதிகாரம் அவருக்கு இருக்கிறது.

அன்றைக்கே பொய்வழக்கு

அந்த சல்லிவனுக்கும் கலெக்டர் க்ரோலுக்கும் தகராறு. கலெக்டர் மீது கொண்டு இருந்த வெறுப்பு காரணமாக, கலெக்டருக்கு மிக வேண்டியவர் போடிநாயக்கனூர் ஜமீன்தார் என்பதனால், கவர்னர் அதிகாரத்தைப் பயன்படுத்தி வழக்குப் போடுகிறார். காவல் துறையை எந்தக் காலத்திலும் வழக்குப் போடுவதற்கு ஏவலாம்.பிரிட்டிஷ்காரர்கள் பின்பற்றிய வழக்கம் தானே.

ஒரு வழக்கைப் போடும் போது அதற்கு எப்படி எப்படி ஜோடிக்க வேண்டும் என்று, அதை உடைக்கிற வேலையில் இருக்கிற உங்களுக்குத்தானே

தெரியும். அதுபோல அன்றைக்கும் ஒரு வழக்கைப் போட்டார்கள். என்ன வழக்குத் தெரியுமா?

குதிரைகள் பூட்டப்பட்ட சாரட் வண்டியில் வந்துகொண்டு இருந்த ஜமீன்தார், அங்கே பாதையில் வந்து கொண்டு இருந்த இரண்டு வழிப்போக்கர்களை வழிமறித்துக் கொள்ளை அடித்தார் என்று வழக்கு. அவர் ஜமீன்தார். நொடித்துப் போன இந்தக் காலத்து அல்ல. ஜமீன்தார் பாளையக்காரர்களாக இருந்த செல்வம் பொருந்தியவர். அந்த வழக்கில் அவரைக் கைது செய்கிறார்கள்.

மிகப்பெரிய வழக்கறிஞர் ஏர்ட் நார்ட்டன் அவருக்கு வழக்காட வருகிறார். அவரும் வெள்ளைக்காரர். ஆனால், இந்திய நாடு விடுதலை பெற வேண்டும்; அது வெள்ளைக்காரனுக்கு அடிமை நாடாக இருக்கக்கூடாது என்ற உணர்வு கொண்ட ஒரு வெள்ளைக்காரர். அவர்தான் புகழ் பெற்ற வழக்கறிஞர் நார்ட்டன். அவர் நீதிமன்றத்திற்கு வந்து வாதாடுகிறார். அப்போது சொல்கிறார். "கவர்னர் மாளிகை அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிற சல்லிவன், தன் சொந்தப் பகையைத் தீர்த்துக் கொள்வதற்காக, குரோல் மீது கொண்ட வெறுப்புக் காரணமாக, அவருக்கு மிகவும் வேண்டிய நண்பரான ஜமீன்தார் மீது பொய் வழக்குப் போட்டு இருக்கிறார்கள். இது கவர்னர் மாளிகையில் இருக்கிற சல்லிவன் செய்த சதி" என்று குற்றம் சாட்டுகிறார்.

வழக்கறிஞர் மீதே வழக்கு

அவ்வளவுதான். இந்த வழக்கறிஞர் சல்லிவனை அவதூறாகப் பேசி விட்டார் என்று கூறி, மானநஷ்ட வழக்கு வழக்கறிஞர் நார்ட்டன் மீது போடப்பட்டது. இதில் திருப்பமே இதுதான். இப்பொழுது வக்கீலே சிறைக்குச்சென்று விடுவார் என்ற நிலைமை வருகிறது. வழக்கறிஞர் மீதே மான நஷ்ட வழக்கு. 5 பேர் கொண்ட ஃபுல் பெஞ்சுக்குப் போகிறது. தலைமை நீதிபதி பெயர் ஜஸ்டிஸ் காலின். அந்த ஐந்தில் ஒரெயொருவர் இந்தியர். அவர் தமிழர். அவர்தான் ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யர். மற்றவர்கள் கெர்ஜன், பிராண்ட், பார்க்கர் ஆவர்.

பாதுகாப்புத் தந்த தீர்ப்பு

வழக்கறிஞர் பெருமக்களே, வழக்கறிஞர்களை இன்றைக்கும் பாதுகாக்கின்ற ஒரு தீர்ப்பை அன்றைக்குத்தான், அந்தத் தலைமை நீதிபதி, 5 நீதிபதிகளின் ஒருமனதான தீர்ப்பாகச் சொல்கிறார்.

"இந்த நாட்டின் தன் கட்சிக்காரனுக்காக, பயம் இன்றி, துணிச்சலாக காரியம் ஆற்றுகிற கடமை யாருக்கு உண்டு என்று கேட்டால், அது வக்கீலுக்குத்தான்

உண்டு. ஆகவே, வழக்கறிஞர் தன் கட்சிக்காரருடைய வழக்கை எடுத்துச் சொல்லிப் பாதுகாப்பதற்காக அவர் பேசுகிற பேச்சையோ, அவர் எடுத்து வைக்கிற குற்றச்சாட்டுகளையோ எதிர்த்து, எந்த வழக்கு மன்றத்திலும் வழக்குத் தொடுக்க முடியாது, வழக்காட முடியாது. ”

எப்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றங்களில் நாடாளுமன்றங்களில் பேசுகிறபோது, அதன் மீது வழக்குத் தொடர முடியாது என்று பாதுகாப்பு இருக்கிறதோ, அதைப்போல நீதிமன்றத்திற்கு உள்ளே ஒரு வழக்கறிஞர் எடுத்து வைக்கிற கருத்துக்குப் பாதுகாப்புத் தந்து இருப்பது, அன்றைக்கு போடிநாயக்கனூரில் ஜமீன்தார் வழக்கிலே தந்த தீர்ப்புதான் இன்றளவும் வழக்கறிஞர்களைப் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருப்ப முடியும்

வழக்குகளில் வாதாடுகிறவர்களின் திறமையைப் பொறுத்து, நீதிமன்றத்தின் பார்வையே திரும்பி விடும்.

1921. மகாத்மா காந்திக்கு செல்வாக்கு ஏற்பட்டு விட்ட நேரம். அவரது புகழ் பரவிக் கொண்டு இருக்கிற நேரம். அப்போது இஸ்லாமிய சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற இரு சகோதரர்கள் மௌலானா முகமது அலி, மௌலானா சவுகத்அலி.

மௌலானா முகமது அலி புகழ் பெற்ற வழக்கறிஞர். அவர் மகாத்மா காந்தி உடன் இரயில் போய்க்கொண்டு இருக்கிறார். 1921 ஜனவரி 20 இல், வால்டேர் இரயில்வே ஸ்டேஷனில் அவரைக் கைது செய்து கூண்டில் ஏற்றுகிறார்கள். என்ன குற்றச்சாட்டு தெரியுமா? “பிரிட்டிஷ் இராணுவத்திலே இஸ்லாமியர்கள் சேரக்கூடாது என்று இராஜதுரோகம் செய்தார், இராணுவத்தில் சேர்ப்பதற்குத் தடையாக இருந்தார், சேரக்கூடாது என்று பிரச்சாரம் செய்தார் என்று அவர் மீது தேசத்துரோக வழக்கு. பல்வேறு பிரிவுகளில் வழக்கு. நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அவரே வாதாடுகிறார்.

வசியம் செய்த மௌலானா

குற்றச்சாட்டில் முக்கியமான சாரம்சம் வழக்கறிஞர் முகம்மது அலி, முஸ்லிம் இளைஞர்களை வசியம் செய்து கெடுத்து விட்டார். பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக வசியம் செய்துவிட்டார் என்று குற்றம் சாட்டிய வழக்கில், கூண்டில் நிறுத்தப்பட்டு இருந்த மௌலானா முகமது அலி, அவரே வாதாடுகிறார்.

நல்ல அழகாக ஆங்கிலத்தில் பேசக் கூடியவர். நீதிபதியைப் பார்த்து அவர் கூறுகிறார். “மாட்சிமை தங்கிய நீதிபதி அவர்களே இங்கே அமர்ந்து இருக்கக்

கூடிய ஜூரர்கள் எல்லோரும், குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு இருக்கிற முகமது அலியின் முகத்திற்கு நேராக உட்காராமல், முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறார்கள்.

இவர் சொல்கிறார் "இங்கே அமர்ந்து இருக்கின்ற ஜூரர்கள் எல்லோரும் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு இருக்கிறார்களே, ஏனென்றால் நான் ஏற்கனவே இஸ்லாமிய இளைஞர்களை வசியம் செய்து விட்டேன் என்றுதானே குற்றச்சாட்டு. இவர்களையும் வசியம் செய்து விடுவேன் என்பதற்காக முகத்தைத் திருப்பி உட்கார்ந்து இருக்கிறீர்களா? நீதிபதி அவர்களே, கொஞ்சம் அவர்களை இந்தப் பக்கம் திரும்பி உட்காரச் சொல்லுங்கள். அவர்கள் முகங்களை இன்னும் நான் பார்க்கவில்லை. நான் சிப்பாய்களை வசியம் செய்து விட்டதைப் போல அவர்களையும் வசியம் செய்ய விரும்புகிறேன்" என்றார். நீதிமன்றத்தில் சிரிப்பு அலை பரவியது.

உடனே நீதிபதி, "கொஞ்சம் முகத்தை இந்தப் பக்கம் திருப்புங்கள்" என்கிறார். திருப்புகிறார்கள். உடனே சொல்கிறார். "நல்லவேளை என்னைப் பாதுகாத்தீர்கள். இதுவரை எனக்கு முன்னால் இங்கே பெண்கள் உட்கார்ந்து இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் எல்லாம் இந்த ஜூரிகளுக்குப்பின்னால் உட்கார்ந்து கொண்டார்கள். இப்போது பெண்கள் முகம் எனக்குத் தெரியவில்லை. இல்லாவிட்டால் இதே பப்ளிக் பிராஸிக்கியூட்டர், இந்தப் பெண்களை எல்லாம் இவன் கோர்ட்டிலேயே வசியம் செய்தான் என்று என்மீது இன்னொரு குற்றச்சாட்டையும் வைப்பார் அல்லவா? அதில் இருந்து நல்லபடியாகத் தப்பித்து விட்டேன்" என்கிறார்.

உடனே, நீதிமன்றத்தில் அனைவரும் சிரிக்கிறார்கள். அடுத்து அவர் சொல்கிறார். "நீதிபதி அவர்களே, நீங்களும் ஜூரிகளைப்போல முகத்தைத் திரும்பி உட்கார்ந்து இருந்தீர்கள். இப்போது என்பக்கம் திரும்பி இருக்கிறீர்கள். அப்படியானால் என்னுடைய வசியம் செய்கிற சக்தி பலமாக இருக்கிறது" என்று தெரிந்து கொண்டேன். நீதிபதியையே நான் வசியம் செய்துவிட்டேன் என்று சொல்லிவிட்டு, என் மீது போடப்பட்டு இருக்கிற 121 பி பிரிவில் இருந்து, ராஜதுரோக வழக்கில் இருந்து, எல்லா வழக்கின் பிரிவுகளையும் சேர்த்தால் இந்த ஜென்மம் போதாதே தண்டனையை அனுபவிக்க? எத்தனை ஜென்மம் எடுப்பது? என்று கேட்கிறார்.

வழக்கறிஞர் காந்தி

அவரது வாதத் திறமையினால், அந்த நீதி மன்றத்தின் பார்வையே மாறுகிறது. சரி, இவ்வளவு சிறப்பாக வாதாடுகிற மௌலானா முகமது அலி இப்படி என்றால், அவர் நெஞ்சில் போற்றுகிற மகாத்மாகாந்தி காந்தி எவ்வளவு பெரிய

வக்கீல். எவ்வளவு அற்புதமாக வாதாடினார் அகிம்சா மூர்த்தி அறவழியின் மூலம் நாட்டின் போக்கையே திருப்பியவர். கத்தியின்றி இரத்தம் சிந்தாமல், இந்த நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்தவர். அவரைப்பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். முதல்முதலாக நீதிமன்றத்திற்குப் போகும்போது அச்சப்படும் இளம் வழக்கறிஞர்களே, கொஞ்சம் கேளுங்கள்.

1892 ஆம் ஆண்டு. ஜட்காவுக்குக்கூட அண்ணன் செலவுக்குப் பணம் தராததால், பம்பாயில் தெருத்தெருவாக நடந்தே போகிறார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. வழக்கே வரவில்லை. 3 மாதங்கள் ஆயின. ஒரு வழக்கும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு வழக்கு வந்து மாட்டியது. அவர் பெயர் மமிபாய். அவர் ஒரு முஸ்லிம். அந்த வழக்கை நடத்துவதற்கு அவன் சொன்ன பாடம், நீங்கள் ஏஜெண்ட் வைத்து வழக்கைப் பிடிக்க வேண்டும் என்று. உடனே காந்தி சொல்கிறார், "எனக்கு அப்படி வழக்கே வேண்டாம். அந்த மாதிரி பிடிக்க நான் விரும்பவில்லை" என்கிறார்.

ஆனால், அதற்கு மீறி மமிபாய் கேஸ் இவர்களிடம் வருகிறது. இவர் பலநாட்கள் உட்கார்ந்து வாதாட ஆயத்தமாகிறார். இரவெல்லாம் படிக்கிறார். குறுக்கு விசாரணை செய்து எப்படிக் கேள்விகள் கேட்பது என்று எல்லாம் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு நீதிமன்றத்திற்குச் செல்கிறார். நீதிமன்றம் பரபரப்பாக இருக்கிறது. காந்தி குறுக்கு விசாரணை ளெசய்ய வேண்டும். எழுந்து நிற்கிறார். நமது வழக்கறிஞர் எப்படியாவது நம்மைக் காப்பாற்றிவிடுவார் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார் மமிபாய்.

இதை சத்திய சோதனையில் காந்தியே எழுதுகிறார்.

நான் எழுந்து நின்றேன். தலைசுற்ற ஆரம்பித்தது. நீதிமன்றமே சுழல்வது போலத் தெரிந்தது. மயக்கமாக வந்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீதிபதி என்னைப் பார்த்துச் சிரித்து இருப்பார். வக்கீல்கள் எல்லாம் பார்த்துச் சிரித்து இருப்பார்கள். எதுவும் என் கண்ணுக்குப்படவில்லை. குறுக்கு விசாரணை செய்ய, ஒரு கேள்விகூட என் மனதில் தோன்றவில்லை. ஒரு கேள்விகூட என் ஞாபகத்திற்கு வரவில்லை. நான் அப்படியே உட்கார்ந்து விட்டேன்.

ஒன்றும் புரியவில்லை. இந்த வழக்கை நான் நடத்த முடியாது. வேறு வழக்கறிஞரைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று, கேஸ் கட்டுகளையும், அதற்காக வாங்கிய 30 ரூபாயையும் நான் திருப்பிக் கொடுத்து விட்டேன். அந்த வழக்கை பட்டேல் என்ற வழக்கறிஞர் எடுத்தார். 50 ரூபாய் கட்டணத்திற்கு நடத்தினார் என்று சத்தியசோதனையில் எழுதுகிறார்.

இதன்பிறகு அவர் இந்தியாவில் எந்த நீதிமன்றத்திற்கும் செல்லவில்லை. அதுவே அவர் எடுத்துக்கொண்ட முதல் வழக்கு, கடைசி வழக்கு. அதற்குப்

பிறகு வேறு எதிலும் ஆஜராகவில்லை. ஆனால், தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று பல ஆண்டுகளுக்குப்பிறகு, 1912 ஆம் ஆண்டு, தென் ஆப்பிரிக்க நாட்டில், நீதிமன்றத்தில் போய் நிற்கிறார். வழக்கறிஞராக அல்ல, குற்றவாளியாகப் போய் நிற்கிறார்.

அங்கு இருக்கிற இந்தியர்கள் எவராக இருப்பினும், கட்டணம் செலுத்தி அங்கே வசிப்பவராக பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்யாதவர்கள், 48 மணி நேரத்தில் வெளியேற வேண்டும். காந்தி பதிவு செய்யவில்லை, 48 மணி நேரத்தில் வெளியேறவும் இல்லை. கைது செய்யப்படுகிறார். நீதிமன்றத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

பாரிஸ்டர் படித்த காந்தி, நீதிபதியிடம் சொல்கிறார். "ஏற்கனவே இதற்காகக் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனையும், 500 பவுன் அபராதமும் விதிக்கப்பட்டு இருக்கிறது. நான் அவர்களைவிட கடுமையான குற்றத்தைச் செய்து இருக்கிறேன். இதைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகும் வெளியேறவில்லை. நீதிபதி அவர்களே, எனக்கு அதைவிடக் கூடுதலான தண்டனை கொடுங்கள். இந்தச் சட்டத்தின் கீழ் எவ்வளவு தண்டனை கொடுக்க முடியுமோ, அதைக் கொடுங்கள்" என்று காந்தி கேட்கிறார்.

சட்டப்படி அதிகட்ச தண்டனை கொடுக்கவா என்று நீதிபதி கேட்கிறார். அப்படியானால், 6 மாத கால கடுங்காவல் தண்டனை. 1000 பவுன் அபராதம் என்கிறார். 'அதையே கொடுங்கள்' என்கிறார் காந்தி. ஆனால், நீதிபதி 2 மாத கால சாதாரண தண்டனை விதிக்கிறார். அதுதான் காந்தியின் முதல் சிறைவாசம்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். 'நீதிமன்றத்தில் எழுந்து நின்றபோது தலைசுற்றியது, ஒரு வார்த்தை பேச முடியாமல் திணறினேன், வெட்கப்பட்டு உட்கார்ந்தேன்' என்று சொன்ன மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் உரையைக் கேட்க, குமரி முதல் இமயம் வரை கோடிக்கணக்கான மக்கள் காத்துக் கிடந்தார்கள். அந்த அரையாடை மனிதரின் சொல்லைக் கேட்க, அவர் வருகிற வழி எல்லாம் தவம் கிடந்தார்கள். அவர் உள்ளத்தில் சத்தியம் இருந்தது. நாடெங்கும் அந்த சத்தியத்தின் குரலைக் கேட்டார்கள்.

போப் தெரிவித்த வருத்தம்

நீதிக்காகப் போராடுகிறவர்கள்-உண்மை பேசுகிறவர்கள் எப்படி தண்டைனக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதற்கு கலிலியோ வழக்கு ஒரு சான்று. 17 ஆம் நூற்றாண்டில் இந்த பூமிப்பந்தைப் பற்றி கோபர்நிகஸ் சொன்ன கருத்தைச் சொன்னவன்தான் கலிலியோ. அவன் சொன்னான்.

“சூரியன் பூமியைச் சுற்றவில்லை. கோள்கள்தாம் சூரியனைச் சுற்றுகின்றன “சூரியன் மையக் கோட்பாடு” இது.

மதநம்பிக்கைக்கு மாறாக இதைச் சொன்னாலே தண்டனை. அப்போது கத்தோலிக்க மதத்தின் தலைமை பீடம் அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பித்து இருந்தது. ஆனால், கலிலியோ சொன்னான். அதனால் அவன் தண்டிக்கப்பட்டான். புதிதாக வந்த போப் ஆண்டவர், அந்தக் கருத்தைச் சொல்லலாம் என்று அனுமதி கொடுத்தார்.

“இரு மண்டலக் கோட்பாடு” என்ற நூலை எழுதினார். அதற்குப் பின்னர் மீண்டும் கூண்டில் நிறுத்தப்பட்டார். “சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது. பூமி சூரியனைச் சுற்றவில்லை என்று நீ இந்த இடத்தில் பகிரங்கமாகச் சொல்ல வேண்டும்” என்று சவுக்கால் அடித்துத் தண்டித்தார்கள். சாகும்வரை அவன் கைதியாக இருக்க வேண்டும் என்று தண்டனை விதித்தார்கள். கடைசியாக, சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது என்று கோர்ட்டில் பலமாகச் சொல்ல வேண்டும் என்றார்கள்.

சவுக்கடிபட்ட கலிலியோ வேறுவழியின்றி, “ஆம், ‘சூரியன் பூமியைச் சுற்றுகிறது’ என்று பலத்த குரலில் சொல்லிவிட்டு, மெலிதான குரலில் தன் நெஞ்சறிவது பொய்யற்க என்பதைப்போல, தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறான். மகாபாரதத்தில், போரில் வெற்றி பெறுவதற்குப் பொய் சொன்ன தர்மன், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற்காக, “அசுவத்தாமன் என்ற யானை இறந்தது” என்று சொன்னதாகச் சொல்வார்களே, அதைப்போல, தன்னைத்தானே திருப்திப்படுத்திக்கொள்வதற்காக கலிலியோ, “இல்லை இல்லை கோள்கள்தான் சூரியனைச் சுற்றுகின்றன” என்று தனக்குத்தானே மெலிதாகச் சொல்லிக் கொண்டானாம். 1642 ஆம் ஆண்டு அவன் வாழ்க்கை முடிந்தது.

தீர்ப்புகள் எப்படித் திருத்தப்படுகிறது தெரியுமா நண்பர்களே?

350 ஆண்டுகளுக்குப் பின்னால், 1992 ஆம் ஆண்டு. அதே வாடிகன் நகர போப் ஆண்டவர் தலைமையில் இருக்கிற கத்தோலிக்கத் திருச்சபையில், “அன்றைக்குக் கலிலியோவுக்கு விதிக்கப்பட்டத் தீர்ப்பு தவறானது” என்று போப் இரண்டாம் ஜான்பால் வருத்தம் தெரிவித்தார்.

350 ஆண்டுகளுக்குப்பிறகு அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறானது என்று வருத்தம் தெரிவித்து, “கலிலியோ சொன்னதுதான் உண்மை; வானமண்டலம் குறித்த கலிலியோ கோட்பாடுதான் சரி. அரிஸ்டாடில் அதுவரை சொன்ன கருத்து ஏற்புடையது அல்ல. அரிஸ்டாடிலின் கருத்து, “கனமான பொருள், அழுத்தமான பொருள் இந்தப் பூமியில் வந்து விழுகிற நேரம் குறைவு.

மெலிதான பொருளைவிட கனமானப் பொருளுக்கு வேகம் அதிகம் என்ற கருத்து தவறான கருத்து. எனவே, கலிலியோ கருத்தே சரியானது" என்று போப் ஆண்டவர் சொன்னார்.

கட்டபொம்மன் வாதம்

இப்படிப்பட்ட செய்திகளைச் சொல்கிற வேளையில், இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடியவன் கூண்டில் நிறுத்தப்பட்ட காட்சி நினைவுக்கு வருகிறது.

அங்கே ஒரு நீதிமன்றம். நடைபெற்ற இடம், நெடுஞ்சாலைக்கு அருகில், சாலை ஓரத்தில் நீதிமன்றம். நல்ல வெயில் நேரத்தில் கூடி இருக்கிறார்கள். அமர்ந்து இருந்தவர்கள் பாளையக்காரர்கள். கொண்டு வந்து நிறுத்தப் பட்டவன் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன். பாஞ்சை மன்னனும், அவன் தம்பி ஊமைத்துரையும், கைகளுக்கும் கால்களுக்கும் விலங்குகள் பூட்டப்பட்டு, புதுக்கோட்டையில் இருந்து கால்நடையாகவே கயத்தாறுக்கு இழுத்துக்கொண்டு போனார்கள். திருச்சியில் மேல் முறையீடு செய்யலாம், புதுக்கோட்டை மன்னன் காப்பான் என்ற நம்பிக்கையுடன் இருந்தான் கட்டபொம்மன்.

பொழுது விடிந்தது. மேல் முறையீடு செய்யலாம் என்று தன் தம்பியிடம் நம்பிக்கையுடன் சொல்லிக் கொண்டு இருந்தான் முதல் நாள் இரவில். விசாரணை என்று நீதிமன்றம் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். நீதிபதி யார் தெரியுமா? தளபதி - பானர்மேன்.

வழக்கு நாடகம்

கட்டபொம்மன் பதிலைத் தமிழில் சொல்கிறான். அதை துபாஷ் இராமலிங்க முதலியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பானர்மேனுக்கு முன்வைக்கிறார். மண்ணின் மானம் காக்க மறந்து, கடமை தவறிய கொத்தடிமைகளாகிவிட்ட பாளையக்காரர்கள், குறுநில மன்னர்கள் வரிசையாக உட்கார்ந்து இருக்கிறார்கள். விலங்கு பூட்டப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஐந்து.

காலத்தின் அருமை கருதி நான் ஐந்து குற்றச்சாட்டையும் விவரித்துக் கூற இயலாமல் இருக்கிறேன். அதில் இரண்டாவது குற்றச்சாட்டு, 'கம்பெனி அதிகாரிகளை மதிக்க மறந்தாய் - கலெக்டர் லூசிங்டன் அழைத்தபோது அவரைப் பார்ப்பதற்கு மறுத்தாய். இப்படிச் சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றச் சாட்டுகளுக்கும் அருமையான பதில்கள் கூறுகிறான் கட்டபொம்மன்.

அவனுடைய பதில் “கம்பெனி அதிகாரிகள் என்னைச் சந்திக்க வந்தபோது நான் மதித்து நடந்து இருக்கிறேன். பகைவர்களானாலும் நண்பர்களானாலும் மதிக்கக் கற்றுக் கொண்டவன் கட்டபொம்மன் என்பதைத்தான் இதுவரை நான் நிலைநாட்டி வந்து இருக்கிறேன். ஆனால், திருநெல்வேலி ஜில்லா கலெக்டரை தாழ்வாரத்தில் காத்துக் கிடந்து பார்க்க வேண்டும் என்ற நிலைமைக்குக் கட்டபொம்மன் எடுபிடியும் அல்ல, வேலைக்காரனும் அல்ல, அது எனக்கு அவசியமும் அல்ல” என்கிறான்.

ஐந்தாவது குற்றச்சாட்டு. கம்பெனியின் இராணுவத் தளபதிகள் பலர் படுகொலை செய்யப்படுவதற்கு நீ காரணமாக இருந்தாய் என்கிறார்கள். இது கொலைக் குற்றச்சாட்டு. இதற்குத்தான் மரணதண்டனை. அப்பொழுது அவன் பதில் கூறுகிறான் “இந்த மன்றத்தில் என் மீது குற்றச்சாட்டைச் சுமத்தியவர்களே, எனதருமை பாஞ்சாலங்குறிச்சியின் மீது கம்பெனிக் காரர்கள் படை எடுத்து வருவீர்கள், பீரங்கிகளைக் கொண்டு என் கோட்டையைத் தகர்ப்பீர்கள், இதற்குப் பிறகும் உங்களை வரவேற்றுச் சரணடைவான் மானத்தை இழந்து கட்டபொம்மன் என்று நினைத்தீர்களா? என்று கேட்கிறான்.

அவன் சட்டக் கல்லூரிக்குப் போனவன் அல்ல - பெரும் படிப்பு படித்தவன் அல்ல. இந்தக் காலத்துப் படிப்பை அந்தக் காலத்தில் படித்தானா என்ற கேள்வி எழுப்பக்கூடாது. அவன் எந்தச் சட்டக் கல்லூரியில் படித்தான்? எந்த வக்கீலிடம் பயிற்சி மேற்கொண்டான்? என்றெல்லாம் கேட்கக்கூடாது. அவன் கேட்கிறான் அருமையான கேள்வி.

“இதுவரை சரித்திரம் இப்படிப்பட்ட விசித்திரமான காட்சியைப் பார்த்தது இல்லை. படை எடுத்து என்னை அழிக்க வந்த இராணுவத் தளபதியே இங்கே நீதிபதியாக உட்கார்ந்து இருக்கிற கொடுமை, உலகில் வேறு எங்கேயும் நடக்காத கொடுமை. என் மீது படை எடுத்துவந்த தளபதியே இங்கே நீதிபதியா? உங்கள் நாடகத்தை நடத்துங்கள் - இஷ்டப்படி என்ன தீர்ப்பு வேண்டுமானாலும் கொடுங்கள்” என்றான்.

மண்டியிட மாட்டார்கள்

மரணதண்டனை என்று தீர்ப்புச் சொல்லிவிட்டுப் போய் விட்டான் பானர்மேன். தூக்கில் போடும்போது அவன் அங்கே இல்லை. கட்டபொம்மனைத் தூக்கில் போடும்போது நடந்ததைப் பற்றி, மறுநாள் பானர்மேன் தன் குறிப்பு நோட்டில் எழுதுகிறான். அவன் எழுதுகிறான். அவனுடைய நாட்குறிப்பில் “கட்டபொம்மனைத் தூக்குமேடைக்குக் கொண்டு போகும்போது, அவனுடைய வலது பக்கத்திலும் இடது

பக்கத்திலும் இருக்கிற பாளையக்காரர்கள் மீது வெறுப்பை உமிழ்ந்தவாறு தன் காலின் ஒவ்வொரு அடியையும் உறுதியாக எடுத்து வைத்து அவன் தூக்கு மேடைக்குப் போனான் என்பதைப் பதிவு செய்கிறேன். இதன்மூலமாக எதிர்ப்பு உணர்வு என்பது எவ்வளவு வேகமாக இருக்கும் என்பதை எச்சரிக்கையாக இந்தச் செய்தியை கம்பெனிக்குத் தெரிவிக்கிறேன்" என்று தன் நாட்குறிப்பில் எழுதி இருக்கிறான்.

இந்த உணர்வு உடையவர்கள், மரணம் நிச்சயம் என்றாலும் நீதிமன்றத்திற்கு முன்பு மண்டியிட மாட்டார்கள்.

1930 ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி பஞ்ச நதிகள் பாய்கிற பாஞ்சாலத்தின் வீர மைந்தன் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு மற்றும் தன்னோடு சேர்ந்த சகாக்களோடு அவன் நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தப்பட்ட நேரத்தில் கழுத்தில் சிவப்புப் பட்டியை அணிந்து கூண்டுக்குள் போனார்கள்.

பகத்சிங் கழுத்தில் சிவப்புப் பட்டி. நீதிபதி பார்க்கிறார், நீதிமன்றம் பார்க்கிறது. "இன்குலாப் ஜிந்தாபாத்" என்று முழக்கம் எழுப்புகிறார்கள்.

"சாவதில்லை சாவதில்லை லெனின் சாவதில்லை; பரவட்டும் பரவட்டும் லெனின் புகழ் அகிலம் எங்கும் பரவட்டும்" என்று முழக்கம் எழுப்புகிறார்கள். ஆம், அந்த நாள் லெனினைப் போற்றுகின்ற நாள். ஜனவரி 21 ஆம் நாள். லெனின் மறைவு நாள். எனவே லெனின் நினைவாக பகத்சிங் கோர்ட்டில் முழக்கம் எழுப்புகிறார். மூன்று நாள் கழித்து மீண்டும் போகிறார்கள். அதேபோல முழக்கம் எழுப்புகிறார்கள். நீதிபதிக்கு ஆத்திரம் தாங்கவில்லை. எனவே, கைகளுக்கு விலங்கு பூட்டச் சொல்கிறார்.

விலங்கு பூட்டியதற்குப்பிறகு அவர்கள் நீதிமன்றத்திற்கு ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அவர்களை இழுத்துக்கொண்டு போகிறார்கள். சிறையில் இருந்து மீண்டும் கொண்டு வருகிறபோது, "எங்கள் கைகளில் விலங்கு போட்டு இருக்கிறீர்கள், நாங்கள் வர முடியாது" என்கிறார்கள். அடித்து உதைத்துச் சித்திரவதை செய்து, பகத்சிங் உள்ளிட்ட ஐந்து பேரை மட்டும் அன்றைக்கு நீதிமன்றத்திற்குக் கொண்டு வருகிறார்கள். எப்படி விலங்கு போடுகிறார்கள் என்றால், பகத்சிங் ஒரு கையில் விலங்கு விலங்கின் மறுபகுதி இன்னொரு போலிஸ்காரனிடம். இரண்டு கைதிகளைச் சேர்த்து விலங்கு போடவில்லை. இப்படிப்பட்ட முறையில் அழைத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு வருகிறார்கள்.

அப்பொழுதுதான் பகத்சிங் சொல்கிறான். இது நீதிமன்றமா? இங்கே உட்கார்ந்து இருக்கக்கூடிய நீதிபதி, நீதிபதியா? அல்லது போலிஸ் அதிகாரியா? How to take my notes? எப்படி என் வழக்கைப்பற்றி என் சகாக்களோடு கலந்து உரையாடுவது? என்று கேட்கிறார். நீதிமன்றத்தில்

வழக்கை நடத்த முடியாது என்று மீண்டும் அவர்களை வெளியே கொண்டு போகிறார்கள். "தூக்கில் போடாதீர்கள். எங்களைத் துப்பாக்கியால் சுடுங்கள் நாங்கள் புரட்சிக்காரர்கள்" என்று கடைசி நிமிடத்தில்கூட முழங்கியவன் அல்லவா மாவீரன் பகத்சிங்!

பொடா நீதிமன்றத்தில்...

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் பல வழக்குகளில், பல நீதிமன்றங்களில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டவன். ஒரு வழக்கில் ஒரு நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டபோது, அரசாங்க வழக்கறிஞர் நீதிபதியிடத்தில் ஒரு மனு கொடுத்தார். 'இவன் நீதிமன்றத்தை விட்டு வெளியேவருகிறபோது, செய்தியாளர்களைச் சந்தித்து அவர்களுக்குப் பதில் சொல்கிறான். பேட்டி கொடுக்கிறான் - இவன் நீதிமன்றத்தில் வாயைத் திறக்கக் கூடாது என்று அரசாங்க வழக்கறிஞர் நீதிபதியிடம் மனுவைக் கொடுத்தார்.

என் இனிய சகோதரர்கள் தேவதாஸ், வீரபாண்டியன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் அந்த மன்றத்தில் இருந்தார்கள். எனக்காக அவர்கள் அங்கே வருகை தந்து இருந்தாலும், இதற்கு நானே பதில்சொல்கிறேன் என்று எழுந்தேன்.

"மாண்புமிகு நீதிபதி அவர்களே, நான் என்னுடைய கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். நான் நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களுடன் பேசக்கூடாது என்று அரசு வக்கீல் மனு கொடுக்கிறார். வெள்ளைக்காரன் காலத்தில் பகத்சிங்கும் அவன் சகாக்களும் நீதிமன்றத்தில் முழக்கம் எழுப்பி இருக்கிறார்கள். அதையும் இந்த நாடு பார்த்து அனுமதி அளித்து இருக்கிறது. இன்றைக்கு விடுதலை பெற்ற இந்தியாவில், நான் நீதிமன்றத்தைவிட்டு வெளியே போகிற வழியில், செய்தியாளர்கள் என்னிடத்தில் கேள்வி கேட்டால் பதில் சொல்லக் கூடாது என்று அரசாங்க வக்கீல் மனு போடுகிறாரே, இதே நிலைமை நீடிக்குமானால், இனி அவரைக் கேட்டுத்தான் நான் மூச்சு விட வேண்டும் என்று சொல்வார் போலிருக்கிறதே?" என்றேன்.

நீதிபதி அமைதியாகக் கேட்டார். இரண்டு நிமிடம் கழிந்தபிறகு நீதிபதி கூறினார், "இந்த சேம்பருக்கு வெளியில் என்ன நடக்கிறதோ, அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை" என்றார்.

உணர்ச்சியைத் தூண்டும் உரை

உரிமைகளுக்காகப் போராடுகிறவர்கள், வழக்கு மன்றத்தில் தங்களுடைய நியாயத்துக்காகப் எப்படிப் போராடி இருக்கிறார்கள் என்பதற்கு எத்தனையோ

சான்றுகளைச் சொல்ல முடியும். நேற்றைய தினம் தொலைக்காட்சியில் பார்த்து இருப்பீர்கள். 80 அகவையைக் கடந்தபின்னரும்கூட, அமெரிக்க வல்லரசுக்குச் சிம்ம சொப்பனமாக இருக்கின்ற ஃபிடல் காஸ்ட்ரோ ஒரு தலைசிறந்த வழக்கறிஞர். புரட்சிக்காரன். இன்னும் சொல்லப்போனால், சேகுவேராவின் வார்த்தைகளில் சொல்வதானால், எதிரிகளை நடுநடுங்க வைக்கக்கூடிய பிசாசோ ஏதோ ஒன்று ஃபிடல் காஸ்ட்ரோவுடன் எந்த நேரமும் இருக்கிறது என்று குறிப்பிட்டாரே சேகுவேரா, அந்த ஃபிடல் காஸ்ட்ரோ.

மான்கடா படை முகாமைத் தாக்கியதற்காகக் குற்றம் சாட்டப்பட்டு அவன் கூண்டில் நிறுத்தப்படுகிறான். பகத்சிங்குக்கு ஏற்பட்ட அதே நிலைமைதான் அவனுக்கும். விலங்கு பூட்டப்பட்டு சிறையில் கொடுமை நிகழ்த்தப்படுகிறது. நஞ்சூட்டி அவனைக் கொல்வதற்குத் திட்டமிடுகிறார்கள். அன்றுமுதல் இன்று வரை எத்தனையோமுறை சி.ஐ.ஏ.க்காரர்கள் திட்டமிட்டார்கள். அவன் சுருட்டு பற்ற வைப்பவன். எனவே சுருட்டில் நஞ்சைக் கலக்க வேண்டும், உணவில் நஞ்சைக் கலக்க வேண்டும் என்று முயற்சித்தார்கள். சிறையில் கொடுப்பதை ஃபிடல் காஸ்ட்ரோ சாப்பிடுவதே கிடையாது. அதே சிறையில் இருக்கிற கைதிகள் அவனுக்கு உணவு சமைத்துக் கொடுப்பார்கள். சிறையில் வழங்கும் சுருட்டைப் பிடிப்பதும் கிடையாது. இந்த நிலைமையில் நீதிமன்றத்திற்குக் குறிப்பிட்ட நாளில் வர வேண்டும்.

ஆனால், ஃபிடல் காஸ்ட்ரோ கொண்டு வரப்படவில்லை. நீதிபதி கேட்கிறார் எங்கே ஃபிடல் காஸ்ட்ரோ? "அவர் நரம்புத்தளர்ச்சி நோய் காரணமாக படுத்த படுக்கையாக இருக்கிறார். அவர் இந்த நீதிமன்றத்திற்கு வர முடியாது. அவர் இல்லாமலேயே வழக்கை நடத்தவேண்டும்" என்று அரசு வக்கீல் சொல்கிறார்.

அப்பொழுது மெல்பா என்கின்ற ஒரு இளம்பெண், "கனம் நீதிபதி அவர்களே" என்று குரல் கொடுக்கிறாள். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறது நீதிமன்றம் அந்தப் பெண்மணியை. அவள் தலைக்கொண்டைக்கு உள்ளே இருந்து ஒரு கடிதத்தை வெளியே எடுக்கிறாள். அது சிறைச்சாலைக்குள் இருந்து ரகசியமாக ஃபிடல் காஸ்ட்ரோ நீதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதம். "இதோ இந்தக் கடிதத்தைப் பாருங்கள். இது ஃபிடல் காஸ்ட்ரோ அனுப்பி இருக்கிற கடிதம்" என்கிறாள்.

அந்தக் கடிதத்தைப் படிக்கிறார். "என்னைச் சிறைச்சாலைக்குள்ளேயே கொன்று ஒழிப்பதற்கு சதித்திட்டம் தீட்டி இருக்கிறார்கள். நான் சுகமாகத்தான் இருக்கிறேன். நான் நலமாகத்தான் இருக்கிறேன். என்னை நீதிமன்றத்திற்கு வரவிடாமல் முடக்குகிறார்கள்" என்று எழுதி இருந்தார். நீதிமன்றத்திற்குக் கொண்டு வரச்சொல்கிறார் நீதிபதி. கொண்டு வரப்படுகிறார் காஸ்ட்ரோ. ஆறேகால் அடி உயரம். ஆஜானுபாகுவானத் தோற்றம், அழகானத் தோற்றம்.

இன்றைக்கும் அழகானத் தோற்றம்தான். இரண்டு கைகளிலும் விலங்கு. மாவீரன் ஃபிடல் காஸ்ட்ரோ, இரண்டு கைகளையும் தூக்கிப் பிடித்தவாறு கேட்கிறார் "இதுதான் நீதிமன்றமா? இதுதான் எங்களுக்கு வழங்கப்படுகிற நீதியா? கைவிலங்கிட்டுத்தான் என்னை நிறுத்துவீர்களா?"

யாரும் எதிர்பார்க்கவில்லை. நீதிபதி விலங்குகளை அகற்றச் சொல்கிறார்.

வழக்குமன்றத்தில் வழக்கு நடந்து தீர்ப்பு வழங்கப்படுகிறது. ரால் காஸ்ட்ரோ உள்ளிட்டவர்களுக்கு 13 ஆண்டுகள். சிலருக்கு 10 ஆண்டுகள். சிலருக்கு 7 ஆண்டுகள். ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு மட்டும் தனி விசாரணை. மீண்டும் தனியாக விசாரிக்கும்போதுதான், வரலாற்றுச்சிறப்புமிக்க வாதத்தை எடுத்து வைத்து, "வரலாறு என்னை விடுவிக்கும்" என்று முழங்கினார். நேரம் கருதி அந்த அற்புதமான வாதத்தை எல்லாம் சொல்ல முடியவில்லை. டிரெய்லர் பார்த்தால் மீதித் திரைப்படத்தை எல்லாம் பார்க்க விரும்புவதைப்போல, இளைஞர்களே படியுங்கள். ஃபிடல் காஸ்ட்ரோவின் வாதத்திறமையைப் படியுங்கள். அதில் இருக்கக்கூடிய உயிரோட்டம் உள்ள விடுதலை உணர்ச்சியைப் படியுங்கள்.

அதற்குப்பிறகு ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை அறிவிக்கிறார்கள். அதைக் கேட்டுப் புன்முறுவலோடு வெளியே வருகிறார். அப்போது அவரருகே சென்று காவலர்கள் விலங்கு போடத் தயங்குகிறார்கள். ஏனென்றால் முதலில் விலங்கு போட்டபோது அதைத் தூக்கிக்காட்டி, இதோடு நான் நிற்க வேண்டுமா? என்று கேட்டவர் ஆயிற்றே.

எனவே, திரும்ப விலங்குபோடத் தயங்கியபோது, "என் இளம் நண்பனே, இங்கே வா விலங்கைப் பூட்டு, என் கைக்கடிகாரம் உடைந்துவிடாமல்" என்று சிரித்துக்கொண்டே சொல்கிறார். அவரைக்கொண்டு செல்கிறார்கள். அதற்குப் பிறகு குறுகிய காலத்திலே விடுதலை பெற்று வெளியே வருகிறார். புரட்சியை நடத்துகிறார், கியூபாவை விடுவிக்கிறார். உலகம் அதிசயத்தக்க விதத்தில் இன்றளவுக்கும் ஃபிடல் காஸ்ட்ரோவின் நீதிமன்ற உரை, விடுதலை உணர்வாளர்களுக்கு எல்லாம் சிலிர்ப்பு ஊட்டிக்கொண்டு இருக்கிறது.

நீதிமன்றத்தில் நெல்சன் மண்டேலா

இதே உணர்வுகள்தான் நெல்சன் மண்டோலாவுக்கு இருந்தது. அது ஒரு நீதிமன்றம் 1964 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி, அந்த நீதிமன்றத்தில் நெல்சன் மண்டேலா நிறுத்தப்படுகிறார். அவருடைய தாயார் மற்றும் மனைவி வந்து இருக்கிறார்கள். செல்வம் மிகுந்த பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்தவர் நெல்சன் மண்டேலா. வீரதீர பராமக்கிரமச்

செயல்களை அவர்கள் முன்னோர்கள் அந்த மண்ணில் செய்து இருக்கிறார்கள். அவரைப் பெற்ற தாயும் நெடுந்தொலைவு பயணம் செய்து நீதிமன்றத்திற்கு வந்து இருக்கிறார். அப்பொழுது எல்லோரும் திட்டமிட்டு, வழக்கறிஞருக்குப் பதிலாக இன்றைக்கு நெல்சன் மண்டேலாவே அவருடைய தரப்பு வாதத்தை எடுத்து வைப்பது என்று முடிவு எடுக்கிறார்கள்.

ஜீன் 11 ஆம் தேதி அவர் தன் தரப்பு வாதத்தை எடுத்து வைக்கிறார். அப்போது சொல்கிறார். ‘ I am Nelson Mandala. I am the first accused. நான் இந்த வழக்கின் முதல் பிரதிவாதி. என் மீது குற்றச்சாட்டு, நான் இராஜதுரோகம் செய்தேன் என்று. நான் அதைச் செய்யவில்லை. ஆனால், புரட்சிக்கு நான் திட்டமிட்டேன். வன்முறை மீது கொண்ட காதலால்அல்ல. வெள்ளை நிறத்து மக்கள், என் இனமக்களைக் கொடுமைப்படுத்தி அடிமைப்படுத்தி வைத்து இருக்கிறார்களே, அந்த அடிமை விலங்குகளை உடைப்பதற்குத் திட்டமிட்டது உண்மை. நான் ஜனநாயக உணர்வைக் கொள்கைகளைப் போற்றுகிறேன். எல்லோரும் சமத்துவத்தோடு வாழ வேண்டும் என்று உயர்ந்த உன்னதமான கோட்பாட்டை நேசிக்கிறேன். அந்தக் கோட்பாட்டுக்காக நான் சாகத் தயராக இருக்கிறேன்” இது நீதிமன்றத்தில் நெல்சன் மண்டேலா சொன்ன வார்த்தைகள்.

நீதிமன்றத்தில் குற்றவாளி என்று தீர்ப்பு அளித்தாலும், என்ன தண்டனை என்று நாளைக்கு அறிவிக்கப்படும் என்று நீதிபதி சொல்கிறார். சிறைச்சாலைக்கு வருகிறார். நாளைக்கு மரணதண்டனை என்று அவர் எதிர் பார்க்கிறார். இதை அவரே டைரியில் எழுதுகிறார். மரணத்திற்குத் தயாராக உறுதியாக இரு. மரணமானாலும் வாழ்வதானாலும் அது தித்திப்பாகவே இருக்கும் என்று ஷேக்ஸ்பியரின் வார்த்தைகளை எழுதி வைக்கிறார்.

மறுநாள் நீதிமன்றத்திற்குச் செல்கிறார். பெருங்கூட்டம். எல்லோரும் முழக்கம் எழுப்புகிறார்கள். ‘நீதிமன்றத்தில் கோஷம் போடக்கூடாது’ என்கிறார் நீதிபதி. நீதிபதிக்கு, குற்றவாளி முகத்தைப் பார்க்கவே துணிச்சல் இல்லை. நெல்சன் மண்டேலா சொல்கிறார் என் முகத்தைப் பார்க்கவே விரும்பவில்லை நீதிபதி. தீர்ப்பை வாசிக்கிறார். தனக்கு மரணதண்டனைதான் என்று எதிர்பார்த்து இருக்கிறார் மண்டேலா. அப்பொழுது நீதிபதி சொல்கிறார், ‘ஆயுள் தண்டனை’ என்று.

நீதிமன்றத்தில் ஒரே முணுமுணுப்பும் சத்தமுமாக நீதிபதி கூறியது அவர்கள் காதில் சரியாக விழவில்லை. அப்பொழுது ஒருவர் எழுந்து நின்று சொன்னார் ‘Life, not death’ மரணம் இல்லை என்கிறார். அந்தக் காட்சியை வர்ணித்துவிட்டு, அவர் நான் மனமகிழ்ச்சியோடு செல்கிறேன் என்கிறார்.

வேண்டாம் வழக்கு நாடகம்

நீதிமன்றத்தில் தண்டனையைப் பெற்று மனமகிழ்ச்சியோடு சென்ற மாமனிதர்களுள் ஒருவர்தான் தந்தை பெரியார்.

1938 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் தேதி. சென்னையில் ஜார்ஜ் டவுண் போலிஸ். 4 ஆவது கோர்ட். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்புரிந்த தந்தை பெரியார் மீது வழக்கு. இந்த மண் தந்த மாமனிதர், சர் ஏ.டி.பன்னீர்செல்வமும், ராஜா சர் முத்தையா செட்டியாரும் நல்ல வழக்கறிஞரை வைத்து வாதாடினார்கள். பெரியார் மறுக்கிறார். "ஒரு வக்கீலும் வேண்டாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்கிறார். அவர் சொன்னதை எல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லை. ரொம்பக் கடுமையாகச் சொல்கிறார். ஏன் வேண்டியது இல்லை என்பதற்கு எல்லாம் அருமையான விளக்கங்கள் தருகிறார்.

நீதிமன்றத்துக்கு வருகிறார். நீதிபதியைப் பார்த்துச் சொல்கிறார்:"கனம் கோர்ட்டார் அவர்களே, எதற்கு நேரத்தை வீணாக்குகிறீர்கள்? நீங்கள் திருப்தி அடைகிறவண்ணம், மந்திரிமார்கள் திருப்தி அடைகிறவரைக்கும், எவ்வளவு அதிகபட்சத் தண்டனை தர முடியுமோ அவ்வளவு அதிகபட்சத் தண்டனையையும், பழிவாங்கும் உணர்ச்சிக்குத் திருப்திக்கு எவ்வளவு தாழ்ந்த வகுப்பு சிறைச்சாலை வகுப்பு தர முடியுமோ அவ்வளவு தாழ்ந்த வகுப்பையும் எனக்குக் கொடுங்கள். எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காக கஷ்டநஷ்டங்கள் அடைதல் என்னும் விலை கொடுக்க வேண்டும். இந்த விசாரணை நாடகத்தை உடனே முடித்து விடுங்கள்" என்கிறார்.

என்ன வார்த்தைகள்?எத்தகைய துணிச்சல்?

சிறைக்கு அஞ்சாச் சிங்கம்

நீதிபதி இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை, இரண்டு ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஓராண்டு கடுங்காவல் ஆக, மூன்று ஆண்டு கடுங்காவல் தந்தைபெரியாருக்கு.

உடனே அனைவரும் கவலையோடு அழுகிறார்கள். பெரியாரோ, சால்வையை உதறித்தோளில் போட்டபடி சிங்கம் போல பெரியார் சிரித்துக்கொண்டே வெளியே வருகிற காட்சியைப் பார்க்கிறார்கள். சிங்கம் அல்லவா? எல்லோரும் கவலைப்படுகிறார்கள். ஆனால், பெரியாரோ, "சிறைச்சாலை வந்துவிட்டது மூன்று ஆண்டுகள் மூன்று ஆண்டுகள்" என்று சிரித்துக்கொண்டே போகிறார் பெரியார்.

மூன்று நாட்கள் கழித்து, டிசம்பர் 9 ஆம் தேதி நவசக்தி பத்திரிகையில், தமிழ்த்தென்றல், தேசியவாதி, ஆலய வழிபாட்டில் நம்பிக்கைக் கொண்ட, திருமுருக வழிபாடு செய்த திரு.வி.க. தலையங்கம் எழுதுகிறார். "இந்தத் தமிழகத்தின் நாலாத்திசைகளிலும் சுற்றிச்சுற்றி ஓய்வு இன்றிச் சுழன்று, வீரகர்ஜனை புரிந்து வந்த அந்தக் கிழச்சிங்கம், இப்போது சிறையில் ஓய்வு பெற்று இருக்கிறது. சிறையில் தலைநிமிர்ந்து கிடக்கிறது' என்று எழுதினார்.

பெல்லாரி சிறைக்கு மாற்றப்படுகிறார் பெரியார். ஐந்தாறு மாதம் கழித்து அரசு விடுவிக்கிறது. மூன்றாண்டுக் காலம் சிறை என்கிறபோது அதிகபட்ச தண்டனை கொடுங்கள் என்று பெரியார் கேட்டதைப்போலவே, மகாத்மா காந்தி கேட்டார், நெல்சன் மாண்டேலா கேட்டார்.

அண்ணாவின் வரையறை

"சட்டம் ஒரு இருட்டறை;வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அது ஏழைகளுக்குக் கிடைப்பது இல்லை" என்றார் பேரறிஞர் அண்ணா. அவரும் ஒரு நீதிமன்றத்தைக் காட்டுகிறார். பல இலக்கியவாதிகள் படைக்காததை பொன்னாட்ஷா படைக்காததை அற்புதமாகப் படைக்கிறார் அண்ணா.

இங்கே கூண்டில் நிறுத்தப்படுகிறவன் யார்? காவியம் எழுதிய படைப்பாளி தேரழுந்தூரில் பிறந்தவன், நம்ம ஊர்க்காரர் கம்பன். குற்றவாளிக்கூண்டில் கம்பர். குற்றம் சாட்டுவது யார்? இலங்கை வேந்தன் இராவணன். நீதிதேவன் அங்கே இருக்கிறார். நீதி தேவனுக்கு முன்னால் அண்ணா குற்றச்சாட்டுக்களைத் தொடுக்கிறார்.

இரக்கம் இல்லாத அரக்கன் என்றீரே, நானா இரக்கம் இல்லாதவன்? என்று வரிசையாகக் கேள்விகளைக் கேட்கிறான் இராவணன். அதைக்கேட்ட நீதி தேவன் மயக்கம் அடைந்து விழுகிறார். கூண்டில் நிறுத்தப்பட்ட கம்பர் இடறுகிறார். கோலைப்பிடித்துக் கொண்டு போகிறார். இப்படி ஒரு இலக்கியத்தில் கூட, தனது கருத்தை ஒரு வழக்கறிஞர் மூலமாகச் சொல்லும் வல்லமையும் ஆற்றலும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு இருந்தது.

வெனிஸ் நகர வணிகன்

இதேபோன்ற ஒரு காட்சியை ஷேக்ஸ்பியர் தருகிறார். ரொம்பச் சுவையான காட்சி. வெனிஸ் நகரத்தில் இருக்கும் ஒரு யூதர். அவன் பெயர் அண்டோனியோ. கப்பல் கம்பெனிக்குச் சொந்தக்காரன். அவனிடம் நிறைய கப்பல் இருக்கிறது. அவன் வெளிநாடுகளுக்கு அனுப்பிய கப்பல்களில் சில கப்பல்கள் மூழ்கி விட்டன. பெருத்த நட்டம். ஷைலக் என்பவனிடம், 3000

லிரா கடன் வாங்கி இருக்கிறான். குறிப்பிட்டத் தேதியில் பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், அதற்கு ஈடாக, அந்தோனியோவின் இருதயத்தை வெட்டிக் கொடுக்க வேண்டும் என்பது நிபந்தனை என்று நோட்டில் எழுதி வாங்கி இருக்கிறான் கந்து வட்டிக்காரன் ஷைலக்.

குறிப்பிட்டத் தேதியில் அந்தோணியாவால் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. தவணை கடந்து விட்டது. 3000 கொடுக்காததால் இதயத்தை வெட்டிக் கொடுக்க வேண்டும். கவலையோடு இருக்கிறான். அப்போது, இவனுடைய நண்பன் ஷைலக்கிடம் சென்று, நான் 6000 கொடுக்கிறேன். அந்தோணியோவை விட்டுவிடு' என்கிறான். அதற்கு ஷைலக் சொல்கிறான் நீ 6 மடங்கு கொடுத்தாலும் சரி 36000 கொடுத்தாலும் சரி, அது எனக்குத் தேவை இல்லை. ஒப்பந்தத்தில் சொன்னபடி, அந்தோணியோ அவனுடைய இருதயத்தை வெட்டித் தர வேண்டும் என்கிறான்.

வேறு வழி இல்லை. வழக்கு நீதிமன்றத்துக்குச் செல்கிறது. வெனிஸ் நகரத்தின் சிற்றரசர், நீதிபதி ஆகிறார். அவர் சொல்கிறார். "ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞர் இந்த வழக்கை முன்னின்று நடத்துவார். அவர்தான் இந்த வழக்கில் தீர்ப்பு அளிப்பார்" என்கிறார். அப்போது ஒரு இளம் வழக்கறிஞர் வருகிறார். நீதிமன்றம் கூடியது.

சைலக் இருக்கிறார். இளம் வழக்கறிஞர் கேட்கிறார். இதயத்தை வெட்டுவதற்குத் தராசு கொண்டு வந்தீர்களா? என்கிறார்.

உடனே இவன், 'அதெல்லாம் சரியாக கொண்டு வந்து விட்டேன்' என்கிறான்.

உடனே இளம் வழக்கறிஞர் சொல்கிறார். "சரிதான். ஏனென்றால், இதயத்தை வெட்டும்போது கொஞ்சம் கூட அதிகமாகவும் குறைவாகவும் வெட்டி விடக் கூடாது. மருத்துவர்களும் வந்து இருக்கிறார்களா? எல்லாம் தயாரா?

'தயார்' என்கிறான்.

சைலக் சொல்கிறான்: 'என்ன அருமையான வழக்கறிஞர். இதயத்தை வெட்ட வேண்டும் என்பதை முதலிலேயே சொல்லி விட்டாரே, நம் பத்திரத்தில் அவ்வாறுதானே இருக்கிறது' என்கிறான்.

அடுத்து வக்கீல் சொல்கிறார்:இதயத்தை வெட்டுங்கள். இதயத்தை மட்டும் தான் வெட்டவேண்டும். ஒரு பவுண்டு இதயத்தை வெட்ட வேண்டும். அப்படி நீ வெட்டும்போது, ஒரு சொட்டு இரத்தம்கூடச் சிந்தக்கூடாது. உன் நோட்டில் என்ன எழுதி இருக்கிறது. இதயத்தை மட்டும்தான் வெட்டுவேன் என்று

இருக்கிறது. அதன்படி இதயத்தை வெட்டிக் கொள்ளலாம். ஆனால், ஒரு சொட்டுக் குருதி கூட கீழே சிந்தக் கூடாது" என்கிறான்.

அந்த நாட்டுச் சட்டப்படி, யாருடைய உயிருக்காவது ஆபத்து ஏற்பட்டால், ஆபத்து ஏற்படுத்தியவரின் சொத்துகள் மொத்தமாகப் பறிமுதல் செய்யப்படும். ஒரு சொட்டு இரத்தம் சிந்தினாலும் சரி, உன் சொத்துகள் மொத்தமாகப் பறிமுதல் செய்யப்படும். இந்த நாட்டுச் சட்டம் தெரியும் அல்லவா? என்கிறார் இளம் வழக்கறிஞர்.

உடனே சைலக் கூறுகிறான்: "இல்லை எனக்கு இரண்டு மடங்கு பணத்தைக் கொடுத்துவிட்டால், நான் போய்விடுகிறேன்" என்கிறார்.

அதற்கு இவர், "அதெல்லாம் முடியாது" என்றவுடன், சைலக் அசலையாவது கொடுத்து ஆளை விடுங்கள் என்கிறார். இளம் வழக்கறிஞரோ அதெல்லாம் முடியாது. சொன்னபடி இதயத்தை வெட்டி எடுத்துக்கொள் என்கிறார்.

வேறு வழி இல்லை. கடைசியில் அந்த நீதிமன்றம் ஆண்டனியின் உயிருக்கே இவன் திட்டமிட்டதாக குற்றம்சாட்டி, ஷைலக்கின் சொத்துகள் முழுமையாக பறிமுதல் செய்யப்படும் – பாதி சொத்து அண்டேனியாவுக்கு – மீதி சொத்துகள் அரசுக்கு என்று அறிவிக்கிறது.

ஆண்டேனியா சொல்கிறான். எனக்குச் சொல்லப்படுகிற அந்தப் பாதிச் சொத்தையும் சைலக்கே வைத்துக் கொள்ளட்டும் என்கிறான். இது ஷேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் நகர வணிகன் (Merchant of Venice) நாடகம். இதில் இளம் வழக்கறிஞராக வந்தவன் யார் என்றால்? ஆண்டேனியா நண்பனின் காதலி போர்ஷியா என்ற பெண்தான், ஆண் வேடத்தில் வந்து வாதாடியதாக ஷேக்ஸ்பியர் எழுதி இருந்தார்.

வழக்கறிஞரின் வல்லமை

எனவே, வக்கீலை வைத்துத்தான் கேஸ். எவ்வளவு அருமையாக ஜோடித்து இருந்தாலும்கூட அதிலும் ஏதாவது ஒரு ஓட்டை இருக்கும். அதைக் கண்டுபிடித்து வாதாடுபவர்கள்தான் பெரிய வக்கீல். எவ்வளவு பெரிய கேஸாக இருந்தாலும், எவ்வளவு பெரிய திருடனாக இருந்தாலும் குற்றத்தைச் செய்யும்போது தடயத்தை விட்டுவிட்டுத்தான் போவான் என்று புராஸிகியூஷன் சொல்கிறது. எவ்வளவு பெரிய கெட்டிக்காரனாக இருந்தாலும் குற்றத்தைச் செய்யும்போது தடயத்தைவிட்டு விட்டுத்தான் போவான் என்பதுபோல எவ்வளவு பெரிய புராசிகியூட்டராக இருந்தாலும், ஜோடிக்கும் வழக்கில் ஏதாவது ஒரு ஓட்டை இருக்கத்தான் செய்யும். அதைப் பார்த்து அடித்து உடைத்து கேஸைத் தகர்ப்பதுதான் வழக்கறிஞரின் வல்லமை.

அமாவாசை இரவில் கொலை

இதேபோன்று ஒரு வழக்கு அமெரிக்கா நாட்டில் இல்லினாய் மாநிலத்தில். அந்த வழக்கில் குற்றம் என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவனும் அவன் நண்பனும் ஒரு நாள் மது அருந்திவிட்டு நடந்து வருகிறபோது எதிரே வந்த ஒருவனை அவர்கள் இரும்பு உலோக உருண்டையை வைத்து அடித்துக் கொன்று விட்டார்கள். அதற்காக அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று சிறைக்கொட்டடியில் அடைக்கப்பட்டு இருக்கிறான்.

இந்தச் செய்தியைப் பத்திரிகையில் படிக்கிறார் ஒரு வழக்கறிஞர். அந்தப் பெயரைப் மாத்திரத்தில் கைகால் நடுங்குகிறார். என் உயிரான நண்பர் ஆம்ஸ்ட்ராங் அல்லவா? அவன் இறந்து விட்டான். அவன் மகன் அல்லவா இப்படி மரண தண்டனையை எதிர்பார்த்துச் சிறையில் இருக்கிறான் என்று குதிரையில் ஏறி, தன் நண்பன் மனைவி விதவையை பார்க்கப்போகிறான். அவள் அழுகிறாள்.

‘என் ஒரே மகன் மரண தண்டனையை எதிர்பார்த்து இருக்கிறான். வழக்கு நடத்த என்னிடம் பணம் இல்லை ஐயா’ என்கிறாள். உடனே வழக்கறிஞர், ‘நீ கட்டணம் எதுவும் தர வேண்டாம். பணம் இல்லை என்று கவலைப்படவேண்டாம். நான் அந்த வழக்கை நடத்துகிறேன்” என்று வந்தார். அவர்தான் ஆபிரகாம் லிங்கன். அந்த வழக்கை நடத்துகிறார்.

நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை. கொலை நடந்ததாகச் சொல்லப்பட்ட இரவில், ஆம்ஸ்ட்ராங் மகன் வில்லியம் ஆம்ஸ்ட்ராங்கும் அவன் நண்பனும் வருகிறபோது, எதிரே ஒருவன் வந்ததாகவும், உலோக உருண்டையை வைத்து அடித்ததாகவும், அவன் கண்ணைத் தாக்கி அதன் காரணமாக மூன்று நாட்கள் கழித்து அவன் இறந்ததாகவும் வழக்கு.

சாட்சிக் கூண்டில் சாட்சியை நிறுத்துகிறார் ஆபிரகாம் லிங்கன்.

நீங்கள் நேரடியாக சம்பவத்தைப் பார்த்தீர்களா?

‘ஆம் பார்த்தேன்.’

இரவு நேரம். எப்படிப் பார்த்தீர்கள்?

‘நான் நிலா வெளிச்சத்தில் அந்தக் கொலையைப் பார்த்தேன்.’

அப்படியா, நல்ல நிலவு வெளிச்சத்திலா பார்த்தீர்கள்?

ஆமாம் பார்த்தேன்.

சரி நீங்கள்போகலாம்.

பஞ்சாங்கத்தைக் கொண்டு வருகிறார்.குறிப்பிட்ட நாளில் நிலவே கிடையாது.

அன்றைக்கு அமாவாசை. சாட்சி, பொய் சாட்சி சொல்லி இருக்கிறார் என்று ஆபிரகாம் லிங்கன் சொல்கிறார்.

அடுத்து குற்றவாளி தரப்பு சாட்சியத்தைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். அதில் இந்த சம்பவம் நடந்ததற்கு மறுநாள்தான் இந்த உலோக உருண்டையும் கவனையும் அந்தப் பகுதியில் தவறாக விட்டுவிட்டுப் போனதாக அதன் உரிமையாளர் ஒருவர் சொல்கிறார். நிரபராதியான வில்லியம்ஸ் ஆம்ஸ்ட்ராங், ஆபிரகாம் லிங்கனின் வாதத் திறமையினாலே விடுவிக்கப்பட்டார்.

ஆபிரகாம் லிங்கன் மிகச்சிறந்த வழக்கறிஞர். அவர் நீதிமன்றத்திற்குப் போனபோது அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்கிறேன்.

ஸ்டாண்டன் என்கிற அமெரிக்க நாட்டின் புகழ்மிக்க வழக்கறிஞர் நீதிமன்றத்தில் இருக்கிறார். அப்போது லிங்கன் ஜூனியர் லாயர். புகழ்மிக்க வழக்கறிஞரின் வாதத்திறமையைப் பார்த்து வியந்தார். என்ன அருமையாக வாதங்களை வைக்கிறார் என்று.

ஒரு நாள் ஒரு வழக்கில் ஆபிரகாம் லிங்கனின் சீனியர் வக்கீல் வராமல், இவர் எழுந்து தன் தரப்பு வாதத்தைச் சொல்கிறபோது, அந்த நீதிபதிக்கு முன்னால் ஸ்டாண்டன் என்ற வழக்கறிஞர் சொல்கிறார். கேட்டாலே வேதனையாக இருக்கும் உங்களுக்கு அவர் சொல்கிறார் 'நீதிபதி அவர்களே I cannot stand the face of this ape மனிதக் குரங்கு போன்ற இவனுடைய முகத்தைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை இந்த வழக்கை நான் நடத்த மாட்டேன் என்று நீதிமன்றத்தில் சொல்கிறார்.

ஆபிரகாம் லிங்கனின் பண்பாட்டைப் பாருங்கள். இதைக் கேட்டு அவர் கோபப்படவில்லை வருத்தப்படவில்லை. அந்த இரவில் வந்து தன் நாட்குறிப்பில் எழுதுகிறார் 'ஸ்டாண்டனின் வழக்காடும் வல்லமை, அதில் இருந்து நான் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வாதத் திறமையை நான் கொஞ்சமாவது பெற வேண்டும்' என்று எழுதுகிறார்.

இவர் இப்படிப்பட்ட பிறப்பில் பிறந்தவர் என்று அண்ணாவின் பிறப்பைப்பற்றி அந்த வார்த்தைகளை இந்த புனிதமான மேடையில் பயன்படுத்த விரும்பவில்லை - அந்த வாசகங்களை எழுதி போர்டு வைத்தார்கள். எங்கே காஞ்சிபுரத்தில். அவர்தம் தம்பிமார்களின் இதயத்தை எரிமலையாக வெடிக்கச் செய்யும் மிக இழிவான வார்த்தைகள். அதற்கு அண்ணா சொன்னார், "ஆத்திரப்படாதீர்கள். ஒரு பெட்ரோமேக்ஸ் விளக்கை அதன் பக்கத்தில் வைத்து, அதற்குக் கீழே உபயம் காஞ்சிபுரம் தி.மு.க. என்று

எழுதுங்கள். எல்லோரும் படித்து விட்டுப் போகட்டும்" என்றார். இதுதான் பண்பாடு.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

என்றார் வள்ளுவர்.

எந்த ஸ்டாண்டன் இந்த மனிதக்குரங்கு முகத்தைப் பார்க்க விரும்பவில்லை என்று சொன்னானோ, அதே ஸ்டாண்டன் 1965 ஏப்ரல் 14 வெள்ளிக்கிழமை நாடகக் கொட்டகையினுள் கொலைகாரன் ஜான் வில்கிஸ் பூத், கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல, கொஞ்சம் கொஞ்சமாக ஒரு தையற்காரன் கடையில் ஆபிரகாம் லிங்கனின் உயிர் பிரிந்துகொண்டு இருந்ததே, அந்த நேரத்தில் ஸ்டாண்டன் வந்து சொன்னான். செத்துக் கொண்டு இருந்த ஆபிரகாம்லிங்கனைப் பார்த்து, 'He belongs to ages. இவன் யுகங்களுக்குச் சொந்தக்காரன்' என்று அதே வக்கீல், ஆபிரகாம் லிங்கனைப் பார்த்துச் சொன்னான்.

ட்ரெட்ஸ்காட் வழக்கு

அந்தக் காலகட்டத்தில் அமெரிக்காவில் எப்படி நீக்ரோக்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதற்கு வழக்கறிஞர்களே பிரசித்திப்பெற்ற வழக்குதான் ட்ரெட்ஸ்காட் வழக்கு. இந்த வழக்கு மிகக்கொடூரமான வழக்கு. இதில் தீர்ப்பு அளித்த ரோஜர் டோனி என்கின்ற அமெரிக்க நாட்டின் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என்ன சொன்னார் தெரியுமா?

"அமெரிக்க அரசியல் சட்டத்தில் மனிதர்களுக்காக வழங்கப்படுகிற உரிமைகள் கருப்பர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் மனித இனத்திலேயே இல்லை அவர்கள் மனிதர்களே அல்ல."

இதுதான் Uncle Tom's Cabin' என்ற நூலின் மூலக்கருவாயிற்று. அதுதான் ஆபிரகாம் லிங்கனைக் கொதித்து எழச்செய்தது. அந்தத் தீர்ப்புதான் நீக்ரோக்கள் போராட்டத்துக்குக் காரணமாயிற்று. 1863 ஜனவரி 1 ஆம் தேதி நீக்ரோக்களுக்கு விடுதலை பிரகடனத்தில் கையெழுத்து இட்டாரே ஆபிரகாம் லிங்கன்.

வாக்கு உரிமைக்காக வாதம்

அதே அமெரிக்காவில் இன்னொரு அருமையான வழக்கு இருக்கிறது. பெண்கள் தங்கள் உரிமைகளுக்குப் எப்படியெல்லாம் போராடினார்கள் என்பது

பற்றி ஒரு வழக்கு இருக்கிறது. பலருக்குத் தெரியாது. அப்போது பெண்களுக்கு வாக்கு உரிமை கிடையாது. அதற்காகப் போராடிய பெண்மணிதான் வீரம் மிகுந்த சூசன் அண்டனி.

அவர் நியூயார்க் நகரில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டுக்குச் சென்று, "அமெரிக்காவில் பெண்களுக்கு ஓட்டு உரிமை வாங்குவதற்காக நான் போராடுவேன்" என்றார். 1872 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி. நியுயார்க் நகரத்தில் 5 ஆம் தேதி வாக்குப்பதிவு. 1 ஆம் தேதியே புதிதாக வாக்காளர்களாகப் பதிவு செய்கிறவர்கள் செய்துகொள்ளலாம் என்று அறிவிப்பவு வருகிறது. முடித்திருத்தகத்தில் ஒரு வாக்குச்சாவடி இருக்கிறது. சூசன்ஆண்ட தன் சகோதரிகள் 3 பேருடன் போகிறார்கள். அதேபோல ஐம்பது பெண்களை பல சாவடிகளுக்கு அனுப்புகிறார்கள்.

வாக்குச்சாவடிகளுக்குச் சென்று, "என்னை வாக்காளராகப் பதிவு செய்ய வேண்டும்" என்கிறார். அங்கே இருக்கிற அதிகாரிகள் சொல்கிறார், "பெண்களுக்கு ஓட்டு கிடையாது. எப்படி உங்கள் வாக்குகளைப் பதிவு செய்வது?" என்கிறார்.

உடனே அவள் சொல்கிறாள்: "அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவின்படி திருத்தத்தின்படி பெண்களும் ஆண்களும் சமம் என்கிறபோது எங்களுக்கு ஓட்டுக் கிடையாது என்று நீ எப்படிச் சொல்லலாம்?என்னைப் பதிவு செய்துதான் ஆக வேண்டும்" என்கிறார்

மறுக்கிறார்கள். உடனே அவள், "உன் மீது கிரிமினல் வழக்குப் போடுவேன். எனக்கு உள்ள உரிமையை மறுத்து நீ ஓட்டுப்போடத் தடுத்தால், வழக்குத் தொடுப்பேன். தண்டனை வந்தால் உனக்குச் சிறையும் இருக்கிறது, அபராதமும் இருக்கிறது தயாரா?" என்கிறாள்.

உடன் அதிகாரி பயந்துபோய் மேல் அதிகாரியிடம் விசாரிக்கிறான். அவனும் பயந்து விட்டான். " சரி, பதிவு செய்து விட்டுப் போங்கள்" என்றவுடன், இந்த 4 பேரும் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்கிறார்கள். நவம்பர் 5 ஆம் தேதி ஓட்டும் போட்டார்கள். பத்திரிகைகளில் செய்தி வந்துவிட்டது. சட்டவிரோதமாக இந்த ஓட்டைப் பதிவு செய்த அதிகாரிகளையும், சூசன் ஆண்டனியையும் கைது செய்ய வேண்டும் என்று சொல்லி, சூசன் ஆண்டனியைக் கைதுசெய்து கூண்டில் நிறுத்துகிறார்கள். இது ரொம்பச் சுவையான ஒரு வழக்கு.

1973 ஆம் ஆண்டு இந்த வழக்கு நடக்கிறது - நீதிபதியின் பெயர் ஹன்ட் உரிமைகளை வேட்டையாடுகிறவன். அவன் சொல்கிறான். 20 ஜூரிகள்

உட்கார்ந்து இருக்கிறார்கள் “இவர் குற்றவாளி என்று தீர்ப்பு அளிப்பதற்குத் தயாராகுங்கள், அதை எழுதுங்கள்” என்கிறான்.

அன்று இரவு சூசன் டைரியில் எழுதுகிறார். இப்படிப்பட்ட கொடுமை உலகில் இதுவரை நடைபெற்றது இல்லை. நீதி குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. மறுநாள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். நீதிபதி கேட்கிறார், ‘கூண்டில் நிறுத்தப்பட்ட குற்றவாளி, ஏதாவது சொல்வதற்கு இருக்கிறதா?” என்கிறார்.

உடனே அந்த அம்மையார்ர கூறுகிறார்:‘**Yes your honour. I have many things to say.** நீங்கள் அளித்த தீர்ப்பு, ஜனநாயகத்தின் அத்தனை நெறிகளையும் குழி தோண்டிப் புதைத்து விட்டீர்கள். என் உரிமைகளை எல்லாம் பறித்தீர்கள். என்னை மட்டும் அல்ல. என் பெண் இனத்தையே அடிமைப்படுத்தி விட்டீர்கள். இது கொடுமையான தீர்ப்பு” என்கிறாள்.

ஆண்களால் தயாரிக்கப்பட்டு, ஆண்களால் பராமரிக்கப்பட்டு, ஆண்களுக்காகவே வழங்கப்படுகிற இந்தச் சட்டம் பெண்களுக்கு எதிரானது” என்கிறார் சூசன்.

தண்டனையைக் குறைக்கச் சொல்கிறீர்களா? என்று கேட்கிறார் நீதிபதி.

“இந்த நீதிமன்றத்தில் எனக்குக் கருணை தேவை இல்லை. சட்டத்தில் எவ்வளவு அதிக தண்டனை கொடுக்க முடியுமோ கொடுங்கள்” என்றார். கடைசியில் வெறும் நூறு டாலர்தான் அபராதம் விதித்தார்கள். அந்த அபராதத்தையும் அந்தப் பெண்மணி செலுத்த மறுத்தாள். அவள் இறந்து 14 ஆண்டுகள் கழித்து 1906 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்கு உரிமை கொடுக்கப்பட்டது.

நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு பெண் தன் ஓட்டு உரிமைகளுக்காகப் போராடுகிறாள். இப்படி போராடுகிறவர்கள்தான் எங்கே அக்கிரமம் நடந்தாலும் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார்கள்.

நூரெம்பர்க் வழக்கு

1945 இல் ஹிட்லர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்ட்வெல்ட், “போர்க் குற்றங்களை விசாரிக்க ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். அதற்கு அமெரிக்காவின் தலைமை நீதிபதி இராபர்ட் ஜாக்சன் அறிவிக்கப்படுகிறார்.” என்றார். சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்ட்வெல்ட் மூவரும் சேர்ந்து, பிரான்ஸ் நாடும் சேர்ந்து, கோடிக் கணக்கானவர்களின் சாவுக்குக் காரணமான நாஜி குற்றவாளிகளுக்கு விசாரணை மன்றம் அமைக்கப்பட்டது.

மனிதகுல வரலாற்றில் எங்கெல்லாம் உரிமைகள் அழிக்கப்பட்டுக் கொல்லப்படுகிறார்களோ, அவர்களுக்கு சர்வதேசத்தில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். ஆகவேதான், கடைசியில் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டான், கோயபல்ஸ் தற்கொலை செய்து கொண்டான். கொடுமைகளுக்குக் காரணமாக இருந்த கோயரிங், மரணதண்டனை விதிக்கப்பட்டு கொட்டடிக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

“இந்த ஆதிக்கச் சக்திகளுக்கு என் உயிரைத் தாரைவார்த்துக் கொடுக்கத் தயாராக இல்லை. என் உயிரை இவர்களுக்குத் தர விரும்பவில்லை என்று, காவலாளி பார்த்துக் கொண்டே இருக்க ஒரு நிமிடத்துக்குள் சயனைடு மாத்திரையை விழுங்கி விட்டான். ஓடி வந்து சோதிக்கிறார்கள். உயிர் பிரிந்து விட்டது. இது நூரெம்பர்க் வழக்கு மன்றம்.

‘No more Mylai’

1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி வியட்நாமில் **“மைலாய்”** என்ற ஒரு கிராமத்துக்கு உள்ளே அமெரிக்க இராணுவம் புகுந்தது. 500 பேர் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் - அமெரிக்க இராணுவத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றவர்களுள் ஒருவன் வில்லியம் காலி.

“இங்கே வியட்நாம் புரட்சி வீரர்கள் இல்லை இல்லை” என்றார்கள். ஈவு இரக்கம் இல்லாமல் சுட்டுக் கொன்றான். வயது முதிர்ந்தவர்களை, பெண்களை, பச்சிளம் குழந்தைகளைச் சுட்டுக் கொன்றான். இரண்டு வயதுக் குழந்தை தப்பி ஓடுகிறது, அந்தக் குழந்தையை ஓடிப்பிடித்துத் தூக்கிப் போட்டுச் சுடுகிறான். கொடூரமான காட்சி. படித்தாலே கண்களில் குருதி வடியச் செய்கிற காட்சி.

500 பேரைக் கொன்றார்கள் - அதற்குப்பிறகு அமெரிக்க நாட்டில் மனசாட்சி விழித்துக் கொண்டது 1971 ஆம் ஆண்டு கூண்டில் நிறுத்தப்பட்டான் வில்லியம் காலி. அவன் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு, சாகிற வரை சிறையில் அடைக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு தந்தது. நிக்சன் ஜனாதிபதியாக இருந்தார். அவனுக்கு மன்னிப்புத் தந்து வெளியே விட்டார்.

அதற்குப்பிறகு எங்கே இராணுவத் துருப்புகள் போனாலும், ‘No more Mylai’ என்பது வழக்கமாகிப் போனது.

மைலாயில் நடைபெற்ற கொடுமையைப் போலத்தான் தமிழ் ஈழத்திலும் நடந்தது.

India's Mylai

அப்பாவித் தமிழர்கள் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள் குற்றமற்றவர்கள் கொல்லப்பட்டார்கள். வீடு வீடாகச்சென்று சுட்டார்கள் காலில் மண்டி இட்டவர்களையும் சுட்டார்கள் இதை எழுதியவன், **'Times'** இதழின் செய்தியாளர் டேவிட் ஹவுஸ்கோ. அவன் எழுதிய கட்டுரைக்குத் தலைப்பு **'India's Mylai' *'இந்தியாவின் மைலாய் – அதுதான் வல்வெட்டித்துறை.'***

வீடுவீடாகச் சென்று பூஜை அறை இருக்கிற தமிழன் வீடுகளில், முருகன் படம் இருக்கிற தமிழன் வீடுகளில், அப்பாவித் தமிழர் தமிழச்சி இருக்கிற வீடுகளில் இராணுவத் துருப்புகள் துப்பாக்கிக் குண்டுகளைக் கொண்டு சுட்டுக்கொன்றார்கள்.

1993 நவம்பர் 19 ஆம் தேதி இந்த நீதிமன்றத்திற்கு நான் வந்தேன். நான் இன்றைக்கு மீண்டும் கேட்க விரும்புகிறேன். குற்றமற்றவர்கள் மீது தண்டனை கொடுப்பது தவறு. குற்றமற்ற கோவலன் உயிர் பறிக்கப்பட்டது. அது ஒரு வீர காவியம் ஆயிற்று.

I Accuse

ஒரு தலைசிறந்த காவல் துறை அதிகாரி இதனையே சுட்டிக்காட்டி எழுதினார். ஆல்பர்ட் ட்ரைபஸ் என்பவன் வழக்கைச் சுட்டிக்காட்டி எழுதினான். ஆல்பர்ட் ட்ரைபஸ் குற்றம் அற்றவன். அவன் பிரெஞ்சு நாட்டுக்கு யூதகுலத்தில் பிறந்த தளபதி. அவன் ஜெர்மனிய இராணுவத்திற்குத் தகவலை அனுப்பினான் என்ற குற்றச்சாட்டைச் சொல்லி எஸ்டர்ஹேசி என்கின்ற தளபதியும், ஹென்றி என்ற உபதளபதியும் சேர்ந்து அபாண்டமாகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்கள்.

12 ஆண்டுகள் சிறைத்தண்டனை. டெவில்ஸ் தீவில் தண்டனை. குற்றம் அற்ற டிரைபஸ், மனைவி மக்களைப் பிரிந்து , 11 ஆண்டுகள் தீவில் வாடினான். எரிமலையாகச் சீறி எழுந்தான், எழுத்தாளர் எமிலி ஜோலா. துண்டு அறிக்கைகளை வெளியிட்டான். **"I accuse** நான் குற்றம் சாட்டுகிறேன்" என்ற தலைப்பில். "நான் நீதிமன்றத்தைக் குற்றம் சாட்டுகிறேன், தண்டனை வழங்கிய நீதிபதியை குற்றம் சாட்டுகிறேன், இராணுவ தளபதிகளைக் குற்றம் சாட்டுகிறேன், இந்த நாட்டு மக்களைக் குற்றம் சாட்டுகிறேன்" என்று குற்றச்சாட்டுகளை அடுக்கினார்.

அந்த எமிலி ஜோலாவைப் பிடித்து, அவருக்கு ஒரு ஆண்டு சிறைத்தண்டனைவிதித்தார்கள். பிரெஞ்சு நாட்டு அதிபராக கிளிமான்கோ வந்தார். மீண்டும் டிரைபஸ் வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தது.

விசாரிக்கப்பட்டது. "டிரைபஸ் குற்றம் அற்றவன் என்றும், எஸ்டர்ஹேசி என்பவன்தான் இந்தத் துரோகத்தைச் செய்தான் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. எஸ்டர்கேசி நாட்டை விட்டு ஓடினான், ஹென்றி தற்கொலை செய்துகொண்டான்.

ஆனால், முதலில் தண்டனை விதித்தவன், அவனும் ஒரு இராணுவ தளபதிதான் பானர்மேன் தண்டனை விதித்ததைப்போல. 11 ஆண்டு தண்டனை முடிந்து 12 ஆவது ஆண்டு தொடக்கத்தில், "குற்றம் அற்றவன் டிரைபஸ், அவனை விடுவிக்க வேண்டும்" என்று கொண்டுவந்தார்கள்.

முதலில் அவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது என்ன செய்தார்கள் தெரியுமா? இராணுவ உடையை அவனுக்கு அணிவித்தார்கள். உடைவாளை இடுப்பில் சொருகினார்கள். இராணுவ வீரர்களுக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தி அவன் தொப்பியைக் கழற்றி வீசி மிதித்தார்கள். அவன் இராணுவ உடைகளை கிழித்து எறிந்தார்கள். உடைவாளை இரண்டாக உடைத்து அவமானப்படுத்தினார்கள். மரணத்தைவிடக் கொடுமையானது அவமானம். மரணத்தைவிடக் கொடியது பழிச்சொல்.

12 ஆண்டுகள் கழித்து மீண்டும் அவனை எலும்பும்தோலுமாகக் கொண்டு வந்தார்கள். மனைவி மக்களைப் பிரிந்து, அவமானங்களைச் சுமந்து, துரோகி பட்டத்தை சுமந்து, சிறுகசிறுகச் சித்ரவதைகளை அனுபவித்து கொஞ்சம் கொஞ்சமாக உயிர் துறந்த டிரைபஸ் திரும்பவும் வந்தார். அவன் மெலிந்த உடம்புக்கு மீண்டும் இராணுவ உடை அணிவித்தார்கள், உடைவாளைத் தரிக்க வைத்தார்கள். சல்யூட் செய்தார்கள்.

பிரெஞ்சு மக்கள் அன்று எழுப்பிய கேள்வி, 11 ஆண்டுகள் பறிபோயிற்றே டிரைபசுக்கு, அதைத் திரும்பக் கொடுக்க முடியுமா? பிரெஞ்சு நாடு, பிரெஞ்சு நாட்டு நீதிமன்றம் 11 ஆண்டுகளைத் திரும்பக் கொடுக்குமா? அவன் துரோகி என்று அவமானம் இழைக்கப்பட்டபோது அவன் சிந்திய கண்ணீரைத் திரும்பக் கொடுக்குமா? அவன் குடும்பம்பட்ட அவமானத்திற்கு நஷ்டஈடு கொடுக்குமா? போனது திரும்புமா? அவனைச் சார்ந்தவர்கள் பட்ட வேதனை, அதற்கு என்ன நஷ்ட ஈடு?

நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது

அதனால்தான், நிரபாரதிகள் தண்டிக்கப்படக்கூடாது என்றது நீதிமன்றம். குற்றவாளிகள் தண்டிக்கப்படலாம். ஆனால், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது. குற்றம் அற்றவர்கள் தண்டிக்கப்படக்கூடாது. அதுதான் புனிதமான வழக்கறிஞர் தொழில். பாதுகாக்கின்ற தொழில்.

ஆகவேதான், நான் கேட்கிறேன். இதோ நீலக்கடலுக்குப் பக்கத்தில் இருக்கிற சோழ மண்டலத்தில் நிற்கிறேன். நாவாய்களை அனுப்பிய, பட்டினப்பாலை பாடிய காவிரிப்பூம்பட்டினம், கடலில் அமிழ்ந்து போகாத காலத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடாரத்திற்கும், ஈழத்திற்கும், பழந்தீவுகள் பன்னீராயிரம் தீவுகளுக்கும் கப்பல்களை அனுப்பிய சோழ மண்டலத்தில் நின்று கேட்கிறேன்.நீதிபதிகளுக்கு முன்னால் நிற்கின்ற வழக்கறிஞர்களிடம் இந்த வழக்கைப் பதிவு செய்கிறேன்.

1992 ஆம் ஆண்டு. இதே வங்கக் கடலில், 450 மைல்களுக்கு அப்பால் 'தங்கநோவா' என்கின்ற ஒரு கப்பலை இந்தியக் கடற்படையினர் சுற்றி வளைத்தார்கள். கப்பலில் இருந்தவர்கள் சொன்னார்கள், "நாங்கள் இலங்கைக்குச் செல்கிறோம், யாழ்ப்பாணத்துக்குச் செல்'கிறோம், வன்னிக்குச் செல்கிறோம்" என்று.

அவர்கள் எந்த ஆயுதங்களையும் கொண்டு செல்லவில்லை. மருந்தும் உணவும் கொண்டு சென்றார்கள். அவர்களைச் சுற்றி வளைத்தது இந்தியப்படை. எவ்வளவோ மன்றாடினார்கள், கேட்கவேயில்லை.

அவர்கள் செய்த பாவம் என்ன?

அந்தக் கப்பலில் வந்த யாழ்ப்பாணத் தளபதி, கால் ஊனமுற்று அதற்காக சிகிச்சைப்பெற்றுத் திரும்பிய கிட்டுவும், 9 பேரும் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டார்கள்.கிரானைடை எரிந்து தன் உயிரையே கருக்கிக் கொண்டான் கிட்டு. மீதி 9 பேரும் அதேபோல மடிந்து கடலில் மிதந்தார்கள். மொத்தம் 10 பேர் இறந்தார்கள். மற்றவர்களைக் கைது செய்தது இந்தியக் கடற்படை. கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு வந்து கப்பலின் மேல்தளத்தில் நிறுத்தி இழிவுபடுத்தினார்களே, அதைப் பார்த்துப் பலர் இரசித்தார்களே, நான் மனசாட்சி உள்ளவர்களைக் கேட்கிறேன்.

தமிழர்களாகப் பிறந்தது அவர்கள் பாவமா? மற்ற வழக்குகளை எடுத்து வைத்துக் கொண்டு அதற்காக அக்னிக் கணைகளை வீசுகிறீர்களே, இந்தியக் கடற்படை சர்வதேசக் கடலுக்குள் போவதற்கு எந்தச் சட்டத்தில் அதிகாரம் இருக்கிறது?

கடைசியில் நீதிமன்றத்துக்குப் போனது. அண்ணன் நெடுமாறன் போராடினார். விசாகப்பட்டினம் நீதிமன்றத்தில் வழக்கு. அந்த நீதிபதி அழகாக கேட்டார், "எவ்வளவு மைல்களுக்கு அப்பால் போய் நீங்கள் மறித்தீர்கள்?

நம் கடல் எல்லைக்கு உள்ளே வந்ததற்காக அந்தக் கப்பலைக் கைது செய்தோம் என்று நாட்டு மக்களை ஏமாற்றிப் பொய்சொன்ன இந்திய நாட்டுக்

கடற்படை அதிகாரிகள், "நாங்கள் 450 மைல்கள்தள்ளி பன்னாட்டுக் கடலில்தான் மறித்தோம்" என்று நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டார்கள்.

அப்போது நீதிபதி கேட்டார், அவர்கள் இடத்தில் ஆயுதம் இருந்திருந்தால் 10 பேர் சாகத் துணிந்தபோது அவர்கள் உயிருக்குப் பயந்தவர்கள் அல்ல. உங்களைத் தாக்கி இருக்கலாமே? ஆக, நீங்கள் சொல்வது ஏற்கத்தக்கது அல்ல. அவர்கள் எந்த ஆயுதமும் கொண்டு வரவில்லை.

அப்படியே இருந்தாலும் ஜெனீவா கன்வென்ஷன்படி, எந்த நாடும் எந்த பகுதியும் தங்கள் இன உரிமைக்கு எந்தக் கப்பலிலும் ஆயுதம் கொண்டு போகலாம். ஜெனீவா கன்வென்ஷனில் இந்தியா கையெழுத்துப் போடவில்லை. ஆனால் ஜெனீவாவில் இருக்கிற கருத்துகளை இந்தியா ஏற்றுக் கொண்டு உள்ளது. இதைத்தான் விசாகப்பட்டணம் நீதிமன்றமும் சொன்னது.

உச்சநீதிமன்றத்துக்குப் போனார்கள். அது சொன்னது கைது செய்தவர்களை அவர்களது நாட்டுக்கே திருப்பி அனுப்புங்கள் அவர்கள் எங்கே போக விரும்புகிறார்களோ அங்கே திருப்பி அனுப்புங்கள். உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பு.

ஏன் இந்தத் தீர்ப்பு மறைக்கப்பட்டது? 11 ஆண்டுகள் பறி போன டிரைபசுக்கு வாழ்க்கையைத் திருப்பிக் கொடுக்க முடிந்ததா?

காலம் பதில் சொல்லும்

இன்றைக்குத் தஞ்சை நீதிமன்ற வளாகத்தில் இருந்து கேட்கிறேன் கிட்டுவின் உயிரைத் திருப்பிக் கொடுக்குமா இந்திய அரசு? கிட்டுவின் உயிரைத் திரும்பக் கொடுக்குமா இந்தியக் கடற்படை? இந்தக் கேள்விகள் வளரட்டும் இளைஞர்களின் உள்ளத்தில்.

நீங்கள் நீதிபதிகள், நான் வழக்குத் தொடுத்து இருக்கிறேன்.

காலம் தீர்ப்பை வழங்கட்டும்.

நன்றி, வணக்கம்.

(24.9.2007 அன்று, தஞ்சாவூர் வழக்கறிஞர்கள் மன்றத்தில், 'வரலாறு சந்தித்த வழக்குகள்' என்ற தலைப்பில் வைகோ ஆற்றிய உரை)

வைகோ நூல்கள்,
மறுமலர்ச்சி தி.மு.க. வெளியீடுகள்,

கீழ்காணும் நூல்கள், ஒளிப்படக்குறுவட்டுகள் தாயகத்தில் விற்பனைக்கு உள்ளன.

1.	சிறையில் விரிந்த மடல்கள் (தமிழ்)	ரூ.	500
2.	From the Portals of a Prison (English)	Rs.	400
3.	தேன் மலர்கள் – வைகோவின் இலக்கியச் சொற்பொழிவுகள்	ரூ.	75
4.	வைகோ கடிதங்கள் பாகம் – 2	ரூ.	25
5.	வைகோவின் சங்கநாதம்	ரூ	50
6.	இதயச் சிறகுகள்	ரூ	50
7.	Vaiko's Clarion Call	Rs.	50
8.	State Autonomy : Declaration of MDMK	Rs.	25
9.	புயலின் முகங்கள்	ரூ.	25
10.	ஈரோட்டுப் பரணி	ரூ.	25
11.	மறுமலர்ச்சி வேங்கைகள் (ம.தி.மு.க. பொறுப்பாளர்களின் முகப்படங்கள், முகவரி, தொலைபேசி எண்கள் அடங்கிய கையேடு)	ரூ.	75
12.	கலிங்கப்பட்டி பிரகடனம்	ரூ.	25
13.	உரிமைப் போராட்டங்கள்– நெய்வேலி மு. செந்திலதிபன்	ரூ.	50
14.	திராவிட இயக்க மாவீரர்கள் – ஆ. வந்தியத்தேவன்	ரூ.	50
15.	உலகம் சுற்றும் வாலிபன் – அருணகிரி	ரூ.	150
16.	அரசியல் பொதுவாழ்வில் வெற்றி பெற... அருணகிரி	ரூ.	20
17.	சதுரங்கம் – அருணகிரி	ரூ.	150

மேற்கண்ட நூல்களைப் பெற விழைவோர் தொடர்பு கொள்க

044-2851 6565 / 66
அருணகிரி 9444 39 39 03

மறுமலர்ச்சி வழக்கறிஞர் படை

க.அழகுசுந்தரம் M.A.B.L.,
மாநில இளைஞர் அணி செயலாளர்,
செல் : **98431 - 48496**

எம்.மனோகரன் B.A.B.L.,
மதுரை மாநகர் மாவட்டத் துணைச் செயலாளர்
செல் : **94433 - 71797**

புதூர் **இரா.சந்திரன்** M.A.B.L.,
மாநில சட்டத்துறைத் துணைச் செயலாளர்
செல் : **97891 - 03969**

ப.சுப்பாராஜ் M.A.B.L.,
தலைமைக் கழக வழக்கறிஞர்
செல் : **94437 - 94751**

புதூர் **இரா.சந்திரன்** M.A.B.L.,
மாநில சட்டத்துறைத் துணைச் செயலாளர்
செல் : **97891 - 03969**

அ.கதிரேசன் M.A.B.L.,
திருப்பரங்குன்றம் (கிழக்கு) ஒன்றிய செயலாளர்
செல் : **94434 - 49821**

கோ.ரவி B.A.B.G.L.,
மதுரை மாவட்ட வழக்கறிஞர் அணி
துணைச்செயலாளர், செல் : **93445 - 12878**

மறுமலர்ச்சி வழக்கறிஞர் படை

மன்றங்களில்...

இயேசு

சாக்ரடீஸ்

நூரெம்பர்க்

கலிலியோ

வெனிஸ் நகர வணிகன்

காந்தி